GOKULAM

கோகுலம்

கோவை ஸ்பெஷல்



மாறுவேடப் போட்டி முடிவுகள்

ரூ.6/-

செப்டெம்பர் 2003

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622 / 23 / 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :

ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-
ஆறு மாதம் : ரூ.36/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.400/-


Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

குழந்தைகள் மனம் கவர்ந்த இதழ்




















செப்டெம்பர் 2003 மலர்: 21 இதழ்: 6

கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்


அன்புக்கும் நேர்மைக்கும் கிடைத்த பரிசு!
கதை: வி. கமலக்கண்ணி
படம்: மகேஸ்
நீலா தன் அக்காவுக்கு ஒரு வெள்ளிக் கொலுசு பரிசாகக் கொடுக்க நினைத்தாள்.
நகரில் உள்ள பல நகைக் கடைகளில் அவளின் ஏழ்மையான தோற்றத்தைக் கண்டு உள்ளே விடவில்லை.
கடைசியாக ஒரு கடைக்குள் நுழைந்தாள் நீலா.
உனக்கு என்ன வேணும்?
கொலுசு இருக்கா...? என் அக்காவுக்குப் பரிசா கொடுக்கணும்.
பணம் வச்சிருக்கியா? பெரியவங்க யாரும் வரலையா?
அக்கா மட்டும்தான். இந்த உண்டியல் நிறைய நான் சேர்த்த பணம் இருக்கு.
உண்டியலில் எண்பத்தி இரண்டு ரூபாய் மட்டுமே இருந்தது.
இந்தக் குழந்தையோட அன்புக்கும் தன்னம்பிக்கைக்கும் கொலுசைக் கொடுக்கலாம்.
இந்தாம்மா கொலுசு.
நன்றிங்க. வரேன்.


நீலா சந்தோஷமாக அக்காவிடம் கொலுசைக் கொடுத்தாள்.
எங்கே வாங்கினே? என்னை அழைச்சிட்டுப் போ நீலா.
கடையை அடைந்தனர்.
சார், இது அசல் வெள்ளிக் கொலுசா?
ஆமாம்மா.
அப்படின்னா விலை ரொம்ப அதிகமாக இருக்குமே! இவள் கொடுத்த பணம்...
கொலுசு நானூறு ரூபாய். இந்தப் பெண் கொடுத்தது எண்பத்தி இரண்டு ரூபாய்.
ஏன் இப்படி கொடுத்தீங்க? எங்களுக்கு வேண்டாம். அந்தப் பணத்துக்கு என்ன தரமுடியுமோ அதைக் கொடுங்க.
உன் தங்கையின் பாசத்துக்கும் உன் நேர்மைக்கும் பரிசாக இதை நீ வச்சுக்கம்மா. மறுக்காதே.

மாறுவேடப் போட்டி முடிவுகள்!

ஆகஸ்ட் இதழில் மாறுவேடப் போட்டி அறிவித்திருந்தோம். எதிர்பார்க்காத அளவுக்கு விதவிதமான புகைப்படங்கள் வந்து குவிந்து விட்டன. பரிசு பெற்ற புகைப்படங்கள் இங்கு பிரசுரமாகியுள்ளன. ஆர்வத்துடன் கலந்து கொண்ட அத்தனைப் பேருக்கும் நன்றி.



முதல் பரிசு :

**ஜெய் பவானி!
ஜெய் காளி!**

ஜி. அஞ்சனா,
அண்ணாநகர், சென்னை



இரண்டாம் பரிசு:

**வந்தான்,
பார்த்தான்,
வென்றான்!**

என். நிருபமா,
திருவல்லிகேணி,
சென்னை



மூன்றாம் பரிசு

**கானக்
குறவஞ்சி
வந்தாளே!**

எஸ். ஷங்கரன.
சென்னை.



ஆறுதல் பரிசு:

சுட்ட பழம் காணோம், சுடாத பழத்தையும் காணோம்!

எஸ். ப்ரியா,
பம்மல்,
சென்னை.



ஆறுதல் பரிசு:

கனவு காணுங்கள்!


பா. பிரணவ ப்ரியா,
மடிப்பாக்கம், சென்னை.



ஆறுதல் பரிசு:

துணிந்தவனுக்குத் தூக்குமேடை பஞ்சுமெத்தை!

எஸ். ஷோபன்,
புதுக்கோட்டை.



ஆறுதல் பரிசு:

இனியொரு விதி செய்வோம்!

கே. ஜெயந்தி,
திருவொற்றியூர், சென்னை



ஆறுதல் பரிசு:

விழுவது மீண்டும் வேகத்துடன் எழுவதற்கே!

அ. ஹரிஹரன்,
உடுமலைப்பேட்டை.



* சானியா

விம்பிள்டன் வென்ற சானியா!

இந்த ஆண்டு விம்பிள்டன் பெண்கள் ஜூனியர் இரட்டையர் பட்டத்தை இந்தியாவைச் சேர்ந்த சானியா மிர்ஸாவும் ரஷ்யாவைச் சேர்ந்த அலிசா கிளேபனோவாவும் வென்றுள்ளனர். விம்பிள்டன் பட்டத்தை வென்ற முதல் இந்தியப் பெண் சானியா என்பது குறிப்பிடத்தக்கது. விம்பிள்டன் வென்ற கையோடு அமெரிக்க ஓபன் டென்னிஸ் பட்டத்தை வெல்லத் தயாராகி விட்டார் சானியா.

பதினேழு வயதாகும் சானியா பிறந்தது மும்பையில். தற்போது ஹைதராபாத்தில் வசித்து வருகிறார்.

சானியாவின் குடும்பமே விளையாட்டு வீரர்கள் நிறைந்த குடும்பம். எனவே அவருக்கும் விளையாட்டுத் துறையில் இயல்பாகவே ஆர்வம் வந்து விட்டது. சானியா இன்று டென்னிஸில் உயர்ந்த இடத்தை அடைந்ததற்குக் காரணம் அவரது பெற்றோர்கள்தான்!

டென்னிஸ் தவிர நீச்சலும், கிரிக்கெட்டும் ரொம்பப் பிடித்தமான விளையாட்டுகள். நீந்துவது, பாட்டுக் கேட்பது, சினிமா பார்ப்பது சானியாவின் முக்கியப் பொழுதுபோக்குகள்.

1999 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் உள்ள இஸ்லாமாபாத்தில் வென்றதே முதன்முதலில் உலக அளவில் கிடைத்த பட்டம்.

சானியாவின் மானசீக குரு ஸ்டெஃபி கிராஃப். டென்னிஸ் உலகின் முக்கிய ஆட்டக்காரரான மேரி பியர்ஸ் பாராட்டியதை சானியா மிகவும் பெருமையாகக் கருதுகிறார்.

விம்பிள்டன்னில் பெண்கள் ஒற்றையர் பட்டத்தை வெல்வதே சானியாவின் கனவு. அவரது கனவு நினைவாக நம் வாழ்த்துகள்!

உங்களுக்காக 40, 41 ஆம் பக்கங்களில் சானியாவின் போஸ்டர்.

கோவை மாவட்டச் சிறப்பிதழ்

கோவை மாவட்டத்திலிருந்து ஏராளமான படைப்புகள் வந்து குவிந்து விட்டன. எனவே அடுத்த இதழும் கோவை மாவட்டச் சிறப்பிதழாக வெளி வருகிறது.

அடுத்தது தர்மபுரி மாவட்டச் சிறப்பிதழ்

நவம்பர் இதழ் தர்மபுரி மாவட்டச் சிறப்பிதழாக வெளி வர இருக்கிறது. தர்மபுரி பள்ளி மாணவ, மாணவியர் தங்களின் படைப்புகளை அனுப்பி வைக்கலாம். கதைகள், ஜோக்ஸ், புதிர்கள், அனுபவங்கள் மட்டுமின்றி, உங்கள் மாவட்டத்தின் சிறப்புகள், வரலாற்று அம்சங்களையும் எழுதலாம். கடைசித் தேதி : 15.9.2003. பிரசுரமானால் பரிசு உண்டு.

எஸ்.கவிதா




வைரக்கல்லின் கர்வம்!

ஏழை விவசாயி ஒருவர் இருந்தார். அவருடைய நிலத்தில் ஒரு கருங்கல்லும், ஒரு வைரக்கல்லும் புதைந்து கிடந்தன. அவற்றுக்கிடையில் யார் பெரியவன் என்ற பிரச்னை எழுந்தது. வைரக்கல், கருங்கல்லைப் பார்த்து, "எனக்குத்தான் மதிப்பு அதிகம். நீ கால் காசு கூடப் பெற மாட்டாய்" என்று ஏளனம் பேசியது. கருங்கல்லோ எதுவும் பதில் பேசாமல் அமைதியாகி விட்டது.

ஒரு நாள் அந்த இடத்தில் விவசாயி கிணறு தோண்ட ஆரம்பித்தார். முதலில் கருங்கல் கண்ணில் தென்பட்டது. கடப்பாரையால் புரட்டி ஒதுக்கிவிட்டுத் தொடர்ந்து தோண்டினார். ஒளி வீசும் வைரக்கல்லைக் கண்டதும் விவசாயிக்கு எல்லையில்லா மகிழ்ச்சி உண்டாயிற்று. வைரக்கல், "என் மதிப்பை இப்போதாவது புரிந்து கொண்டாயா? யாருமற்ற அனாதையாக இந்தக் காட்டுக்குள் கிடந்து தவி!" என்று கருங்கல்லைப் பார்த்துப் பரிகாசம் செய்தது. வைரக்கல்லை உள்ளங்கையில் பத்திரப்படுத்திக் கொண்டு விவசாயி ஊருக்குள் ஓடினார்.

அழ. வள்ளியப்பா நினைவு சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற கதை



விலை மதிப்பு மிக்க வைரக்கல் விவசாயியிடம் இருக்கும் விஷயம் நாடு முழுவதும் பரவியது. விவசாயிக்கும் வைரக்கல்லுக்கும் ரொம்பப் பெருமையாக இருந்தது. விவசாயிக்கு, 'வைரக்கல்லை வைத்துக் கொள்வதா அல்லது விற்று விடுவதா? எவ்வளவுக்கு விற்பது? அதுவரை எப்படி இந்தக் குடிசையில் வைத்துப் பாதுகாப்பது?' என்று ஏகப்பட்ட குழப்பங்கள் உண்டாயின.



இந்நிலையில் ஒரு திருடன் வைரக்கல்லை விவசாயி வீட்டிலிருந்து திருடிச் சென்று விட்டான். அழுது புரண்ட விவசாயி அரசனிடம் சென்று முறையிட்டார். அரண்மனைக் காவலர்கள் திருடனைப் பிடித்து அரசன் முன் நிறுத்தினார்கள். திருடனுக்குத் தண்டனை அளித்து விட்டு வைரக்கல்லைப் பார்த்த அரசனுக்கு மிகவும் பிடித்து விட்டது. எனவே விவசாயிக்கு வைரக்கல்லுக்குப் பதிலாக ஒரு பெருந்தொகை வழங்க உத்தரவிட்டான். வேறு வழியின்றிப் பெற்றுக் கொண்டு விவசாயி வீடு திரும்பினார்.

விவசாயியிடமிருந்து அரண்மனைக்கு வந்துவிட்ட வைரக் கல்லுக்குத் தலைகால் புரியவில்லை. அரசாங்க கஜானாவில் பொக்கிஷமாகப் பாதுகாக்கப்பட்டு வந்தது. அண்டை நாட்டு அரசர்கள் பலருக்கும் பொறாமை உண்டாயிற்று. விஜயபுரிப் பேரரசன் தனக்குக் கப்பம் கட்டும்போது, அந்த வைரக்கல்லையும் ஒப்படைக்க வேண்டுமென்று ஓலை அனுப்ப முடிவு செய்தான். ஒற்றர் மூலம் இதை அறிந்து கொண்ட அரசன் அதற்கு முன்

வைரக்கல்லைக் கோவில் சொத்தாகச் சேர்த்துவிட முடிவு செய்தான். பரிவாரங்களுடன் சென்று வைரக்கல்லை, கடவுளின் காலடியில் வைத்துவிட்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

வைரக்கல்லுக்கு இன்னும் ஒருபடி கர்வம் தலை தூக்கியது. "தெய்வத்தின் சந்நிதிக்கே வந்துவிட்டேன். இதையெல்லாம் பெருமையடித்துக் கொள்ள வேண்டாமா? கேட்பதற்கும், பார்ப்பதற்கும் கருங்கல் இல்லையே!" என்று சங்கடப்பட்டது.

அப்போது, "கேட்டுக் கொண்டும், பார்த்துக் கொண்டும்தான் இருக்கிறேன்" என்றது கருங்கல். ஆச்சர்யம் அடைந்த வைரக்கல், "எங்கிருந்து பேசுகிறாய்?" என்றது. அதற்குக் கருங்கல், "நீ என் காலடியில்தான் கிடக்கிறாய்!" என்று அமைதியாகச் சொன்னது.

நிமிர்ந்து பார்த்தது வைரக்கல். கடவுள் சிலையாக வடிக்கப்பட்ட கருங்கல்லின் காலடியில்தான் கிடக்கிறோம் என்று தெரிந்ததும் வைரக்கல்லின் கர்வம் அடங்கியது.

"வைரக்கல்லே! மக்கள் உன் மீது வைத்திருந்தது மதிப்பு அல்ல; ஆசைதான்! அந்த ஆசையால் அவர்கள் அடைந்த இன்பத்தை விடத் துன்பமே அதிகம். நீ அலங்காரப் பொருள்தான்; அவசியப் பொருள் இல்லை. ஆனால் நான் மக்களின் வாழ்க்கைக்கு அஸ்திவாரம் ஆகிறேன். உன்னை விட நான் வலிமையானவன்; அதே சமயம் பொறுமையானவன். அதனால்தான் அவர்கள் இந்த உயர்ந்த நிலையில் என்னை வைத்திருக்கிறார்கள்" என்று கருங்கற் சிலை விளக்கம் சொன்னது.

"என்னை மன்னித்து விடு!" என்று வைரக்கல் கெஞ்ச, சிலையின் மனம் இளகியது.

"கர்வம் நீங்கி மனம் திருந்திய உன்னை என்னைக் காட்டிலும் உயர்ந்த இடத்தில் வைக்கிறேன். இன்றிலிருந்து என் கிரீடத்தை அலங்கரிப்பாயாக!" என்று சிலை வாழ்த்தி அருளியது.





ஹோட்டலுக்குப் போகும் நாய்கள்!

முதலில் ஒரு குட்டிக்கதை சொல்லட்டுமா?

ராபர்ட் ஷெல்லர் என்பவர் ஓர் எழுத்தாளர். அவர் தன் வீட்டுச்சுவர் அருகில் நின்று, வீட்டுத் தோட்டத்தை வேடிக்கை பார்த்தபடி நின்று கொண்டு இருந்தார். அந்தச் சுவர் மீது வரிசையாய் ஊர்ந்து சென்று கொண்டிருந்த எறும்புகள் அவரது கவனத்தைக் கவர்ந்தன.

அந்த எறும்புகளின் கட்டுப்பாடான, வரிசையான நடை, சீரான வேகம், சுறுசுறுப்பு, கடுமையான உழைப்பு என்று பல நல்ல குணங்கள் அவர் மனதில் நிழலாடின. அந்த வரிசையின் கடைசியில் சற்று இடைவெளி விட்டு ஒரு எறும்பு மெதுவாக வந்து கொண்டிருந்தது.

அந்தக் கடைசி எறும்பு, தன்னை விட பல மடங்கு பெரிய உருவமும், எடையும் கொண்ட சிதைந்த மரப்பட்டை ஒன்றைக் கஷ்டப்பட்டுச் சுமந்தபடி நடந்து வந்ததால்தான், மற்ற எறும்புகளின் வேகத்துக்கு ஈடு கொடுத்து நடக்க முடியவில்லை, என்று புரிந்துகொண்ட ராபர்ட் ஷெல்லர், அந்த எறும்பை மட்டும் கூர்ந்து கவனித்தார்.

அந்த எறும்பு வந்து கொண்டிருந்த பாதையில், சுவரின் நடுவே பெரிதாய் ஒரு விரிசல் இருப்பதைக் கவனித்த அவர், இவ்வளவு பெரிய சுமையுடன் வரும் எறும்பு, நிச்சயம் அந்த விரிசலுக்குள் விழுந்து விடும். அல்லது கையில் கொண்டு போகும் பொருளை இந்தப் பக்கத்தில் விட்டு விட்டு, அதுமட்டும் விரிசல் பகுதியைக் கடக்கும் என எதிர்பார்த்து, அடுத்து எறும்பு என்ன செய்கிறது என்று பார்க்க ஆவலுடன் உற்றுப்பார்த்தார்.

விரிசலை நெருங்கியவுடன் எறும்பு,

ஒலிம்பிக் போட்டிகளில், நீண்டதூரம் ஓடும் மாரத்தான் ஓட்டம் மிகப் பிரபலமானது. வழக்கமான 100 மீ, 200 மீ... 400 மீ போல இல்லாமல், மாரத்தான் ஓட்டப்பந்தயத்தில் பங்கேற்பவர்கள் 26 மைல் 385 கெஜம் தூரம் ஓட வேண்டும். ஏன் இப்படி அசாதாரணமான தூரத்தை ஓடிக் கடக்க வேண்டும், உங்களுக்குத் தெரியுமா?

இண்டர்நெட்டில் பார்த்தபோது, இதற்கு விடை கிடைத்தது. கி.மு.776ல் ஒலிம்பிக் விளையாட்டில், நீண்ட தூர ஓட்டப்பந்தயம் அறிமுகம் செய்யப்பட்டது. இதற்கு சுவாரசியமான ஒரு பின்னணிக் கதை உண்டு.

கிரேக்கர்களுக்கும் பாரசீகத்தவருக்கும் இடையில் நடந்த போரில், கிரேக்கர்கள் வெற்றி பெற்ற செய்தியைத் தெரிவிக்க, மாரத்தான் என்ற இடத்திலிருந்து கிரேக்கத் தலைநகரான ஏதென்ஸ் நகரத்துக்கு ஒரு வீரன் 22மைல் 1740 கெஜ தூரம் ஓட்டமாய் ஓடிவந்து, மன்னனிடம், "நாம் ஜெயித்து விட்டோம்! கொண்டாடுங்கள்!" என்று சந்தோஷமாய்த் தெரிவித்த மறுகணம், தளர்ந்து கீழே விழுந்து, மரணமடைந்தான்.

வெற்றிச் செய்தியை மன்னருக்குத் தெரிவிக்க அந்த வீரன் ஓடிவந்ததைக் கௌரவிக்கும் விதமாய், 22 மைல் தூரம் ஓடும்படியாக மாரத்தான் ஓட்டப்பந்தயம்

சுற்றும் முற்றும் பார்த்தது. நிலைமையைப் புரிந்து கொண்டு, அந்த விரிசலின் குறுக்காக அந்த மரப்பட்டையை நகர்த்தி வைத்தது. அதன்மீது ஏறி, விரிசலைக் கடந்து, மறுபுறம் வந்து சேர்ந்தது. அடுத்து, அந்த மரப்பட்டையை எடுத்து சுமந்துகொண்டு தன் பயணத்தைத் தொடர்ந்தது.

இந்தக் குட்டிக் கதையிலிருந்து நாம் தெரிந்து கொள்கிற பாடம் என்ன? எந்த ஒரு விஷயத்தையும் ஒரு தடையாக, பாரமாக நாம் நினைக்கக் கூடாது. அந்தத் தடையையே ஒரு படிக்கட்டாக மாற்றிக் கொண்டு விட்டால், நாம் நமது வெற்றிப் பயணத்தைத் தடையில்லாமல் தொடரலாம்.

அடுத்த தடவை வீட்டில் எறும்பைப் பார்க்கிறபோது, உங்கள் வீட்டில் உள்ள மற்றவர்களுக்கு இந்த எறும்புக் கதையைச் சொல்வீர்கள்தானே?

அடுத்தபடியாக, சில விசித்திரமான தகவல்களைப் பார்க்கலாமா?

- முதல் உலகப் போரின்போது, ஃபிரான்ஸ் நாட்டின் போர் முனையிலிருந்து செய்தி கொண்டு வரவும், போர்முனைக்குச் செய்தி அனுப்பவும் பயன்படுத்தப்பட்ட புறா ஒன்றுக்கு, போர் முடிந்த பின், அதன் சேவையைப் பாராட்டி மெடல் வழங்கப்பட்டது.

- மிகவும் மெதுவாக நடப்பவரைப் பார்த்து, தூங்கி வழிந்து கொண்டே நடக்காதே என்று சொல்வது வழக்கம். ஆனால், மிகவும் மெதுவாக நகரும் நத்தை, தூங்க ஆரம்பித்தால் மூன்று, நான்கு வருடங்கள் வரை தூங்கிக் கொண்டே இருக்குமாம்!

- செல்லப்பிராணியாக நாய்களை வளர்ப்பது உலகெங்கும் நடப்பதுதான். ஆனால் ஜப்பானிலும், அமெரிக்காவிலும் நாய் வளர்ப்பவர்கள் தங்கள் நாய்களை, நாய்களுக்கென்றே நடத்தப்படும் பிரத்யேக ஹோட்டல்களுக்கு அழைத்துச் செல்கிறார்கள்.

கடைசியாகச் சில ஜோக்ஸ்...

''ஆரோக்கியத்துக்கு வழி வகுக்கும் சப்ஜெக்ட் எது?''

''வரலாறு! அதில்தானே நிறைய 'டேட்ஸ்' இருக்கு!''

''டாக்டர்! எனக்கு ஞாபகமறதி ரொம்ப அதிகமா இருக்கு''

''எப்போதிலிருந்து?''

''எதைக் கேட்கறீங்க டாக்டர்?''

தொகுப்பு: எஸ். சந்திரமௌலி

அறிமுகப்படுத்தப்பட்டது. ரோமானியப் பேரரசர் தயோடெசிஸால் ஒலிம்பிக் போட்டிகள் நிறுத்தப்பட்டன.

1896ல் மறுபடி ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டபோது, மாரத்தான் பந்தய தூரங்கள் மாறுபட்டன. 1908ல் லண்டனில் நடந்த ஒலிம்பிக் போட்டியில், மாரத்தான் ஓட்டம், பிரிட்டிஷ் மகாராணி வசிக்கும் விண்சர் அரண்மனையில் தொடங்கி, லண்டனில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற ராயல் ஸ்டேடியத்தில் முடிவடைந்தன.



இரண்டுக்கும் இடைப்பட்ட தூரம் 26 மைல் 385 கெஜம். இனி வரும் ஒலிம்பிக் போட்டிகளிலும், இந்தத் தூரமே, மாரத்தான் ஓட்டப்பந்தயத்துக்குரிய தூரமாகக் கடைப்பிடிக்க அப்போது முடிவு செய்யப்பட்டது. ஆகவேதான் இன்றும் ஒலிம்பிக் போட்டியில், மாரத்தான் ஓட்டப்பந்தய வீரர்கள் ஓடும் தூரம் 26 மைல் 385 கெஜமாக உள்ளது.

குண்டுப் பூனை கார்ஃபீல்ட்

உலகப் புகழ் பெற்ற கார்ட்டூன் 'குண்டுப் பூனை' கார்ஃபீல்டிற்குக் கடந்த ஜூன் 19ஆம் தேதியுடன் 25 ஆண்டுகள் பூர்த்தியடைந்திருக்கிறது. இதுவரை பத்திரிகைகள், புத்தகங்கள், டி.வி. வாயிலாக வாசகர்கள், ரசிகர்களிடம் பிரபலமாக விளங்கிவந்த 'கார்ஃபீல்ட்' முதன்முதலாக திரைப்பட வடிவில் அடுத்த ஆண்டு டுவெண்டியத் செஞ்சுரி ஃபாக்ஸ் தயாரிப்பில் வெளிவர இருக்கிறது.







'கார்ஃபீல்ட்' முதன்முதலாக 1978ஆம் ஆண்டில் சிண்டிகேட் முறையில் அமெரிக்காவில் மட்டுமன்றி, உலக நாடுகள் முழுவதுமாக 41 பத்திரிகைகளில் வெளிவரத் தொடங்கியது. தற்போது 2600 செய்திப் பத்திரிகைகளில் வெளிவருவதோடு, தினசரி 220 மில்லியன் வாசகர்களைப் பெற்றுள்ள கார்ஃபீல்ட், கடந்த ஏழாண்டுகளாக டெலிவிஷன் தொடராகவும் வெளிவந்துள்ளது. . துவக்கத்தில் 'கார்ஃபீல்ட் தி டோஸ்ட்டர்' என்ற பெயரில் துவங்கப்பட்ட இந்தத் தொடர் பின்னர் பூனை வடிவம் பெற்றது. 1981 மற்றும் 1988ஆம் ஆண்டுகளில் நேஷனல் கார்ட்டூனிஸ்ட் சொசைட்டி வழங்கும் ஆண்டின் மிகச் சிறந்த ஷ்யூமர் ஸ்டிரிப் கார்ட்டூனிஸ்ட் விருதையும் 'கார்ஃபீல்ட்' பெற்றுள்ளது. 58 வயது ஜிம் டேவிஸ்தான் இந்தக் குண்டுப் பூனையின் சிருஷ்டி கர்த்தா.

சிறு வயதில் ஆஸ்துமாவினால் பாதிக்கப்பட்டிருந்த ஜிம் டேவிஸ் வீட்டிலேயே அடைபட்டுக் கிடந்தபோது ஓவியத்தில் ஈடுபாடு காட்டத் தொடங்கினார். பின்னர் இண்டியானாவில் உள்ள பால் ஸ்டேட் யுனிவர்சிடியில் ஆர்ட் மற்றும் பிசினஸ் படித்து, உதவி கார்ட்டூனிஸ்ட்டாக விளம்பர கம்பெனியொன்றில் பயிற்சி பெற்றார். ஐந்தாண்டுகளுக்குப் பிறகு மனதில் தோன்றிய பூனையொன்றுக்கு 'கார்ஃபீல்ட்' என்று பெயரிட்டு வடிவமைத்தார். இவர் இப்போது 55 உதவியாளர்களுடன் மத்திய இண்டியானாவில் ஸ்டூடியோ ஒன்றை நிறுவி, தன்னுடைய நினைவுகளை, கற்பனைகளை கார்ஃபீல்ட் வடிவத்தில் வெளிப்படுத்தி வருகிறார்.

- அ. குமார்



அடுத்த இதழில்...


அருண் சரண்யா

எழுதும்

துரோகி யார்?

-திகில் திருப்பங்கள் நிறைந்த
புதிய தொடர்கதை ஆரம்பம்!

இன்றே உங்கள் பிரதிகளுக்கு
ஏஜெண்டிடம் சொல்லி
வையுங்கள்.



எல்லாம் தெரிந்த ஏகாம்பரம்!

அன்று ஞாயிற்றுக் கிழமை. கணபதி காலனி மாணவர்கள் ஓரிடத்தில் கூடியிருந்தனர்.

அப்போது பாலா, கையில் ஒரு ரிமோட் காருடன் அங்கு வந்து சேர்ந்தான். எல்லோரும் ஆர்வத்துடன் அவனைச் சூழ்ந்து கொண்டனர்.

"எங்க மாமா போன மாதம் சிங்கப்பூர் போயிருந்தாராம். எனக்காக இந்த ரிமோட் கார் வாங்கிட்டு வந்திருக்கார்டா. இந்த ரிமோட்டைக் கையில் வச்சுக்கிட்டு அழுத்தினால் போதும். கார் கதவு முதலில் திறக்கும். பிறகு கதவு மூடியதும் அருமையான பாட்டு கேட்க ஆரம்பிக்கும், லைட் எரியும். அடுத்த நொடி கார் சீறிப் பாயும். நீங்களும் விளையாடிப் பாருங்கடா" என்று காரைக் கொடுத்தான் பாலா.

ஒவ்வொருவராக ரிமோட்டை வாங்கி, இயக்கிப் பார்த்தனர். அந்த ஞாயிற்றுக் கிழமை மிகவும் மகிழ்ச்சியான நாளாக மாறிக் கொண்டிருந்தது.

"பாலா, கார் பத்திரம், எல்லாம் தெரிஞ்ச ஏகாம்பரம் வந்துக்கிட்டு இருக்கான்" என்றான் கிருஷ்ணா.

பிரசன்னா அங்கு வந்து சேர்வதற்கும் கார் நிற்பதற்கும் சரியாக இருந்தது.

"ஐயோ, கார் ரிப்பேர்டா" என்றான் வருத்தத்துடன் பாலா.

"ஒண்ணும் கவலைப்படாதீங்கடா. நான் சரி பண்றேன்" என்றான் பிரசன்னா.

"எங்க கவலையே நீ கைவைக்கப் போறேங்கிறதுதாண்டா. வேண்டாம் பிரசன்னா" என்றான் கிருஷ்ணா.

"நீ சும்மா இரு. இந்த மாதிரி எத்தனை கார்களை நான் சரி பண்ணிக் கொடுத்திருக்கேன் தெரியுமா?"

யார் சொல்வதையும் கேட்காமல் பிரசன்னா காரியத்தில் இறங்கினான். நண்பர்கள் கவலையுடன் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

சிறிது நேரத்தில் எல்லோரும் எதிர்பார்த்ததுபோல், கார் உருவம் இல்லாமல் தனித்தனி பாகங்களாக உருமாறி இருந்தது.

காரின் பாகங்களைக் கழற்றிய பிரசன்னாவுக்கு மீண்டும் ஒன்று சேர்க்கத் தெரியவில்லை.

"இதுக்குத்தானேடா உனக்கு எல்லாம் தெரிஞ்ச ஏகாம்பரம்ன்னுகூட பேர் வச்சிருக்கோம்" என்றான் பாலா கோபத்துடன்.

"கோபப்படாதே பாலா. வா, நம்ம முரளி அங்கிள்கிட்டே போய் கொடுப்போம். சரி பண்ணிடுவார்" என்று நடந்தான் பிரசன்னா.

நண்பர்கள் அவனைப் பின் தொடர்ந்து முரளியைச் சந்தித்தனர்.

காரின் பாகங்களை ஆராய்ந்த முரளி, "முதல்லேயே கொண்டு வர வேண்டியது தானே! சின்னச் சின்ன பாகங்கள் எல்லாம் இப்படி உடைஞ்சுப் போயிருச்சே. இனி இதை ஒண்ணும் பண்ண முடியாது" என்றார்.

பிரசன்னா நழுவினான்.

தனக்குத் தெரியாததைத் தெரிந்ததாகக் கூறிக் கொள்பவன் ஒரு காரியத்தைக் கெடுப்பதோடல்லாமல் அந்தக் காரியத்தை மற்றவர்களும் செய்ய முடியாதபடி சிக்கலுண்டாக்கி விடுவான். இதை உணர்த்தும் குறளைக் கண்டுபிடியுங்கள்!

பொய்ப்படு ____ ____ கையறியாய்
பேதை ____ கொளின்

- தம்பிப்பயல்

1000/- ரூபாய் பரிசுப் போட்டி



இந்த மாதப் போட்டி

பொருத்துக:

1. வெள்ளையனே வெளியேறு — தீவு
2. முதல் சுப்ரீம் கோர்ட் பெண் நீதிபதி — 1889
3. சார்லி சாப்ளின் — தென்ஆப்பிரிக்கா
4. டாஸ்மேனியா — ஃபின்லாந்து
5. ஆரஞ்சு நதி — ஃபாத்திமா பீவி
6. ஏரிகளின் நாடு — 4.12.1931
7. கட்டாமல், கறக்காமல், காடேறித் திரியாமல், நின்ற இடத்தில் ஒரு படி பால் - அது என்ன?
8. மேலே உள்ள படத்தில் இருப்பது என்ன மரம்?

ஒவ்வொரு மாதமும் பள்ளி மாணவ, மாணவியர்க்கு உதவும் வகையில் இந்தப் போட்டி நடத்தப்படுகிறது. இதுவரை நிறையப் பேர் பரிசு வாங்கியிருக்கிறார்கள். பரிசு கிடைக்காதவர்கள் மனம் தளராமல் மீண்டும் முயற்சி செய்யுங்கள். சரியான விடைகளைக் கண்டுபிடித்து எழுதி, பெற்றோர் கையொப்பத்துடன், முகவரி கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். பள்ளி, வீட்டு முகவரிகளை மறக்காமல் குறிப்பிடுங்கள். மொத்தப் பரிசு ரூ. 1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசித் தேதி **20.9.2003**

ஆசிரியர்,
கோகுலம்,
47-NP. ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை -97

தரையில் பூக்கும் தாமரை!

தரையின் மீது பூத்திடும்
தன்மை பூணும் தாமரை!
விரியும் தாழை தோற்றிடும்
வெண்மை யான தாமரை!

அரிய தாக வீட்டின்முன்
அழகு சேர்க்கும் தாமரை!
தெருவில் போகும் கூட்டமும்
திரும்பிப் பார்க்கும் தாமரை!

கரைந்து நீரில் ஓட்டமாய்க்
கலைந்து போகும் தாமரை!
விரும்பும் வேறு நாட்களில்
விரைந்து பூக்கும் தாமரை!

எறும்பு மேய ஏற்றதோர்
இரையாய் ஆகும் தாமரை!
அரிசி மாவில் போட்டிடும்
அழகுக் 'கோல'த் தாமரை!

தளவை இளங்குமரன்



அ. குமார்



புத்திசாலி சமீரா!

மார்வார் நகரத்தில் வசித்த அமர்சிங் என்பவருக்கு ஒரு மகனும் மூன்று மகள்களும் இருந்தனர். இவர் பணக்கார வியாபாரி என்பதால் பல தரப்பட்ட மக்களிடம் தொடர்பு இருந்தது. மகனுக்குத் திருமண வயதாகி விட்டதால், குறுநில மன்னர்கள் முதல் பெரிய செல்வந்தர்கள் உள்பட பலர் பெண் கொடுக்க முன் வந்தனர். ஆனால் தன்னுடைய மகனுக்குப் புத்திசாலியான பெண்ணாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று அமர்சிங் ஆசைப்பட்டார். தான் கேட்கும் கேள்விக்குத் தகுந்த பதில் சொல்லக் கூடிய பெண் கிடைக்கும் வரை காத்திருப்பதாகவும் சொல்லியிருந்தார்.

அமர்சிங், தன்னுடைய மகனுக்குப் பொருத்தமான, அதாவது தன்னுடைய கேள்விக்குச் சரியான பதில் சொல்லக் கூடிய பெண்ணைத் தேடிக் கண்டு பிடித்து வருவதாகச் சொல்லி, வேறு ஊர்களுக்குப் புறப்பட்டார். அவருக்குத் தெரிந்த பல பணக்கார நண்பர்கள் அவரை வரவேற்று உபசரித்து, தங்கள் பெண்களிடம் அந்தக் கேள்வியைக் கேட்கும்படி வற்புறுத்தினார்கள். 'ஆண்டுதோறும் வரும் பருவ காலங்களில் உனக்கு மிகவும் பிடித்தமானது எது?' என்று கேட்டார்.

'குளிர் காலம் தான் சிறந்தது. கதகதப்பான ஆடைகள் அணிந்து மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கலாம்' என்றும், 'மழைக்காலம் தான் சிறந்தது. விழுகின்ற மழைத்துளிகளின் ஓசை கேட்பதற்கு இனிமையாகவும் எங்கு பார்த்தாலும் பசுமையும் புத்தம் புதியவையாகவும் இருக்கும்' என்றும், 'கோடைக்காலம் தான் சிறந்தது. குளிர் காலம் போல் குளுமையாகவோ, மழைக்காலம் போல் ஈரமாகவோ இருக்காது' என்றும் அந்தப் பெண்கள் பலவிதமாகப் பதிலளித்தனர். இது போன்ற பதில்களால் திருப்தியடையாத அமர்சிங், ''நான் பார்த்த பெண்களுக்கு அழகும் செல்வமும் நிறைந்திருந்தாலும், எதிர்பார்த்த பதில் கிடைக்கவில்லை. இருப்பினும் நான் இந்த முயற்சியைக் கைவிட மாட்டேன்'' என்று சொல்லி பக்கத்து ஊருக்குக் கிளம்பினார்.

அந்த ஊரில் தன்னுடன் இளமையில் பழகிய ஏழை நண்பர் ஒருவர் இருப்பது நினைவுக்கு வரவே அவரைத் தேடிச் சென்றார். எதிர்பாராமல்

வந்த பணக்கார நண்பரைப் பார்த்து நண்பர் திகைத்துப் போனாலும், வந்தவரை வரவேற்று உபசரித்தார். "உனக்குத் திருமண வயதில் ஒரு மகள் இருப்பதாக அறிந்தேன். உண்மைதானா?" என்று கேட்டு தன் மகனுக்குப் பெண் தேடும் விஷயத்தைச் சொன்னார். "ஆமாம். அவள் பெயர் சமீரா. நானோ ஏழை. நீயோ பணக் காரன். நமக்குள் எப்படி சம்பந்தம் ஏற்பட முடியும்?" என்று சொன்னார் ஏழை நண்பர். "நான் எதிர் பார்ப்பது பணத்தையோ அழ கையோ அல்ல. நான் கேட்கும் ஒரே ஒரு கேள்விக்குத் தகுந்த பதிலைச் சொன்னால் போதும். அந்தப் பதிலில் தான் என்னுடைய மக னின் திருமணமே அடங்கியிருக் கிறது" என்றார் அமர்சிங்.

அதைக் கேட்டு மகிழ்ச்சி யடைந்த ஏழை நண்பர், தன்னு டைய மகளை வரச் சொன்னார். ஏழையாக இருந்தாலும் இளமையும் அழகும் கொண்ட அந்தப் பெண் ணிடம் வழக்கம் போல் தன்னு டைய கேள்வியைக் கேட்டார் அமர்சிங்.

சிறிது யோசனைக்குப் பின் சொன்னாள்: "இப்படியொரு கேள்வியை நான் எதிர்பார்க்கவில்லை. எனினும் எல்லா பருவங்களுமே அவற் றிற்குரிய சிறப்பைப் பெற்றிருப்பதால், அதனால் கிடைக்கக் கூடிய எல்லாப் பலன் களுமே நமக்குரியது என்பதால் எல்லாப் பருவங்களையுமே பிடித்தமானதாகக் கருதுகிறேன்" என்றாள்.

அமர்சிங்கிற்கு அந்தப் பதில் மிகவும் பிடித்துப் போயிற்று. எதிர்பார்த்த பதில் கிடைத்து விட்டதால் அந்தப் பெண் ணையே தன்னுடைய மருமகளாக்கிக் கொள்வதாக நண்பருக்கு வாக்குறுதி அளித் தார்.

சில மாதங்கள் கழித்து தன்னுடைய மகனுக்குச் சமீராவைத் திருமணம் செய்து வைத்தார். அமர்சிங்கின் மருமகளாக அவரது மாளிகைக்கு வந்து சேர்ந்தாள் சமீரா.

ஒரு நாள் மாளிகைத் தோட்டத்தில் சமீராவும் அவள் கணவரின் மூன்று சகோ தரிகளும் மார்வார் நகரத்தின் பிரபலமான 'பஞ்சா' என்ற ஆட்டத்தை விளையாட ஆசைப்பட்டனர். அதற்கு ஒரே அளவிலான ஐந்து கற்கள் தேவைப்பட்டன. தோட்டத் தில் எங்கு தேடியும் கற்கள் கிடைக்காததால் என்ன செய்வதென்று யோசித்தபோது, அந் தப் பெண்களில் ஒருத்தி, "கொஞ்சம் பொறுங்கள். நான் உள்ளே சென்று ஐந்து தங்க நாணயங்களைக் கொண்டு வருகிறேன். பிறகு விளையாடலாம்" என்று சொன்னாள்.

தங்க நாணயங்களை வைத்து வெகு நேரம் விளையாடிக் கொண்டிருந்தவர்கள் பின்னர் சலிப்படைந்து மாளிகைக்குள் திரும்பினர். சமீரா மட்டும் அந்தத் தங்க நாணயங்களைச் சிறு பையில் இட்டு, தன்னுடைய இடுப்பில் பத்திரமாகச் செருகி வைத்துக் கொண்டாள்.


அன்று மாலை வீட்டினுள் அனை வரும் கூடியிருந்தபோது, "நம்முடைய நகரத்தை நோக்கி கொள்ளையர் கூட்டம் வரப் போவதாகத் தகவல் கிடைத்திருக் கிறது. அதனால் தங்க நகைகளை அணிய வேண்டாம். அனைத்தையும் கழற்றிக் கொடுங்கள். ஒரு பெட்டியில் வைத்து பத் திரப்படுத்தி விடலாம்" என்று சொன்னார் அமர்சிங். அவருடைய பெண்கள் தங்கள் நகைகளைக் கழற்றிக் கொடுத்தனர். ஆனால்

ஒரு சொல்லுக்குப் பொருள் தெரியவில்லையென்றால் உடனே நாம் 'டிக்ஷனரி'யைத் தேடுகிறோமே, 'டிக்ஷனரி' என்ற சொல் எப்படி வந்தது தெரியுமா?

லத்தீன் மொழியில் 'டிக்ஷேர்' என்றால் 'சொல்லுகிறது' என்று பொருள். தெரியாத வார்த்தைக்குப் பொருள் சொல்வதால் இந்நூலை 'டிக்ஷனரி' என்று அழைக்கின்றனர்.

- கு.டீ.ம பிரசன்னா





சமீரா மட்டும் "தயவு செய்து என்னுடைய நகைகளை மட்டும் கேட்காதீர்கள். அவற்றை நானே பத்திரமாக வைத்துக் கொள்ள அனுமதி யுங்கள்" என்று சொல்லி, தன்னுடைய நகைகளைக் கழற்றி ஏற்கெனவே தங்க நாணயங்களை வைத்திருந்த சிறு பைக்குள்ளேயே போட்டு, இடுப்பில் பத்திரமாகச் செருகிக் கொண்டாள்.

அன்றிரவே யாரும் எதிர்பாராத நேரத்தில் கொள்ளையர்கள் ஊருக்குள் புகுந்தனர். மக்கள் பீதியில் அலறி அடித்துக் கொண்டு சிதறி ஓடினர். அமர்சிங் குடும்பத்தினர் குதிரைகள் மீதமர்ந்து சிறிதும் ஓய்வின்றி ஒரே வேகமாக இருளில் ஓட்டிச் சென்றனர். பொழுது புலரும் நேரத்தில் தங்களுடைய நகரத்தை விட்டு வேறொரு நகரத்தை நோக்கி தாங்கள் சென்று கொண்டிருப்பதை உணர்ந்தனர். தங்குவதற்கும் வீடு இன்றி, உணவும் இன்றி, அந்நிய நகரத்திற்குள் நுழைந்திருப்பதை உணர்ந்த அமர்சிங், இளைப்பாறுவதற்காக அனைவரையும் ஓரிடத்தில் இறங்கச் சொன்னார். "உங்களிடம் பணமிருந்தால் கொடுங்கள். முதலில் சாப்பிடுவதற்கு ஏதாவது வாங்கிக் கொண்டு வரலாம்" என்றார்.

'சொற்பப் பணமே இருப்

பதாகவும் விற்பதற்குத் தங்களிடம் நகைகள் கூட இல்லை. எல்லாவற்றையும் பெட்டியில் வைத்துப் பூட்டி இழந்து விட்டல்லவா வந்திருக்கிறோம்'' என்று சொன்னார்கள் சகோதரிகள். சமீரா மட்டும், ''கவலைப்படாதீர்கள் மாமா. நான் கொண்டு வந்த நகைகள் அனைத்தும் இருக்கின்றன. அதில் ஏதாவது ஒன்றை விற்றுப் பணமாக்கலாம்'' என்று தைரியம் சொன்னாள். தன்னிடமிருந்த சிறு பையிலிருந்து ஒரு வளையலை மட்டும் எடுத்து அமர்சிங்கிடம் கொடுத்து, ''இதை விற்று, கிடைக்கும் பணத்தில் முதலில் சாப்பிடுவதற்கு ஏதாவது வாங்கி வாருங்கள். நாங்கள் இங்கேயே தங்கியிருக்கிறோம்'' என்று சொல்லி அனுப்பி வைத்தாள்.

அமர்சிங்கிற்கு அந்த நகரம் புதிதாக இருந்ததால் சரியான வழி தெரியவில்லை. ஊருக்குப் புதியவர் என்பதைத் தெரிந்து கொண்ட ஒருவன், அவரிடம் தந்திரமாகப் பேசி விஷயத்தைத் தெரிந்து கொண்டான். தன்னுடைய கடைக்கு அழைத்துச் சென்று வளையலை வாங்கிக் கொண்டான். வேறொரு இடத்தில் பணம் வாங்கித் தருவதாகச் சொல்லி அழைத்துச் சென்று, வழி தெரியாத இடத்தில் விட்டுவிட்டு மறைந்து விட்டான். தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த அவர் தட்டுத் தடுமாறி வழி கேட்டு, குடும்பத்தினரிடம் வந்து சேர்ந்தார். நடந்தவற்றை அறிந்து கொண்ட சமீரா, இந்த முறை தன்னிடமிருந்த தங்க நாணயங்களிலிருந்து இரண்டை எடுத்தாள். தன்னுடைய கணவனிடம் கொடுப்பதற்கு முன் எளிதில் புலப்படாத வகையில் சிவப்பு நிற அடையாளமொன்றைக் குறியிட்டு, கொடுத்தனுப்பி வைத்தாள். அவனும் அதே போல் சென்று அதே மனிதனிடம் ஏமாந்து திரும்பி வந்தான்.

'ஏமாற்றுபவனை எப்போதுமே உஷாராகக் கண்காணிக்க வேண்டும்' என்பதை உணர்ந்தாள் சமீரா. இம்முறை தன்னுடைய கணவரின் உடைகளை அணிந்து கொண்டு எடுப்பான ஆண் மகனைப் போன்ற தோற்றத்துடன் குதிரையில் ஏறி அமர்ந்து ஊருக்குள் சென்றாள். அந்த ஏமாற்றுப் பேர்வழி இவளையும் சந்தித்து தன்னுடைய கடைக்கு அழைத்துச் சென்றான்.

ஆண் மகனைப் போன்று தன்னுடைய குரலை மாற்றிக் கொண்டு, ''நான் சில தங்க நாணயங்களை வாங்க விரும்புகிறேன். உன்னிடம் ஏதாவது நல்ல நாணயங்கள் கிடைக்குமா?'' என்று கேட்டாள் சமீரா.


''இருக்கிறது ஐயா! என்று சொல்லிய படியே தங்க நாணயங்களை வைத்திருந்த பெட்டியை வெளியே எடுத்தான். சமீரா கடையை ஒரு நோட்டம் விட்டாள். அந்தச் சிறிய கடைக்குள் இருந்த கண்ணாடிப் பேழைக்குள் தான் அமர்சிங்கிடம் கொடுத்தனுப்பிய வளையல் இருப்பதைக் கண்டாள். ''இதோ பாருங்கள். முதல் தரமான தங்க நாணயங்கள் இவை'' என்று சொல்லி இரண்டு நாணயங்களை எடுத்து அவளிடம் காட்டினான் அந்த ஏமாற்றுப் பேர்வழி. நிதானமாக அவற்றைக் கையில் வாங்கி உற்றுப் பார்த்தாள் சமீரா. அதில் தான் அடையாளமாக வைத்திருந்த சிவப்பு நிறக் குறியீடுகள் இருப்பதைக் கண்டாள். ''என்ன விலைக்கு இவற்றைக் கொடுப்பீர்கள்?'' என்று கேட்டாள்.

அவளுடைய விலையுயர்ந்த ஆடைகளையும் எடுப்பான தோற்றத்தையும் கண்ட அவன், 'சரியான ஆள் கிடைத்திருக்கிறான். கேட்ட தொகை கிடைக்கும்' என்று கருதி அதிக விலை சொன்னான். உடனே அவள் கொஞ்சமும் அதிர்ச்சியடையாமல் தன்னுடைய சிறிய பையிலிருந்த மற்ற மூன்று தங்க நாணயங்களை எடுத்து காட்டினாள்.

'கருப்பு விதவை' என்று அழைக்கப்படும் சிலந்தி பயங்கர விஷத்தன்மை வாய்ந்தது. இவை கடித்தால் பூனை உடனே இறந்துவிடும். ஒட்டகம் மூன்று மணி நேரத்திலும் மனிதன் மூன்று நாட்களிலும் இறந்து விடுவர்.

- குட்டி பிரசன்னா.

• யானைகளைப் பிடிக்கக்கூடாது என்று 1981 ஆம் ஆண்டு தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டது.



"நீ இப்போது சொன்ன அதே விலைக்கு இவற்றை வாங்கிக் கொள்கிறாயா?" என்று கேட்டாள்.

"இந்த நாணயங்கள் நான் காட்டிய நாணயங்களைப் போல் தரமானவை என்பதற்கு என்ன அத்தாட்சி?"

"அதற்கென்ன? இங்குள்ள வேறொரு நகைக்காரரிடம் வேண்டுமானால் கேட்டு பரிசோதித்து விடலாம் வா!"

சமீராவிடம் வகையாக மாட்டிக் கொண்ட அந்த ஏமாற்றுப் பேர்வழி, வேறு வழியில்லாமல் பக்கத்திலிருந்த நகைக் கடைக் காரனை வரவழைத்துக் காட்டினான்.

இரண்டையும் பரிசோதித்துப் பார்த்த அவன், 'இரண்டுமே தரமானதுதான். அது மட்டுமல்ல. அனைத்துமே ஒரே மாதிரியான நாணயங்கள்தான்' என்று உறுதிபடுத்திச் சொன்னான். அவன் வெளியேறும் வரை காத்திருந்த சமீரா, மீண்டும் கடினமான ஆண் குரலில் பேசினாள்: "இதோ பார், இன்று காலை என் குடும்பத்தைச் சேர்ந்த இருவரை ஏமாற்றியதைப் போல் என்னையும் ஏமாற்றலாமென்று நினைக்காதே. இந்த இரண்டு தங்க நாணயங்களிலும் நான் வைத்தனுப்பிய சிவப்புக் குறியீடுகள் இருப்பதைப் பார்!"

"இவை உன்னுடையவைதான் என்பதற்கு என்ன அத்தாட்சி?"

"ஓ, உனக்கு அத்தாட்சி தேவையா?" என்று சொல்லியவள் தன்னிடமிருந்த இன்னொரு கை வளையலை எடுத்து காட்டினாள். "இதே போல் இன்னொன்றை அந்தக் கண்ணாடிப் பேழைக்குள் வைத்திருக்கிறாயே, அதை வெளியே எடு. இவை இரண்டும் ஒரே ஜதை வளையல்கள். என்னுடைய மாமாவிடமிருந்து அந்த வளையலையும், கணவரிடமிருந்து தங்க நாணயங்களையும் நயவஞ்சகமாக ஏமாற்றிப் பறித்துக் கொண்டிருக்கிறாய். என்னுடைய பொருள்களைத் திருப்பிக் கொடுத்துவிடு. இல்லையெனில் காவல் அதிகாரிகளிடம் சொல்லி உன்னைச் சிறையில் அடைக்கச் சொல்வேன்" என்றாள்.

காவல் அதிகாரிகள் என்ற வார்த்தையைக் கேட்டதும் அவனுக்குப் பயமேற்பட்டது. காலில் விழுந்து மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டான். "தயவு செய்து அதிகாரிகளிடம் சொல்லாதே. உன்னுடைய பொருட்களைத் திரும்பக் கொடுத்து விடுகிறேன். கொண்டு போய் விடு."

"அவசரப்படாதே. அத்தனை சுலபமாக உன்னை விட்டுவிட மாட்டேன். என்னிடமுள்ள தங்க நாணயங்களை முதலில் நீ சொன்ன விலைக்கே வாங்கிக் கொள்ள வேண்டும். இல்லையெனில் எங்களை ஏமாற்றிய குற்றத்திற்காக உன்மீது புகார் கொடுக்க வேண்டிவரும்" என்றாள்.

வேறுவழியில்லாமல், அழ மாட்டாத குறையாகத் தன்னிடமிருந்த பணத்தை எடுத்துக் கொடுத்து நாணயங்களைப் பெற்றுக் கொண்டான். சமீரா தன்னுடைய குடும்பத்தினர் தங்கியிருந்த இடத்திற்குச் சென்று நடந்தவற்றையெல்லாம் சொன்னாள். இதைக் கேட்டதும், "என்னுடைய மகனுக்கு நல்ல புத்திசாலியான பெண்ணைத் தான் திருமணம் செய்து கொடுத்திருக்கிறேன் என்பது எனக்கு அப்போதே தெரியும்" என்று சொன்னார் அமர்சிங்.

அவள் கொண்டு வந்த பணத்தில் தேவையான உணவுப் பொருட்கள் மட்டுமின்றி உடைகளையும் வாங்கி வந்த அமர்சிங், பின்னர் அவளிடமிருந்த நகைகளை விற்று வியாபாரம் செய்யத் தொடங்கினார். நாளடைவில் வியாபாரம் விருத்தியாகி, சொந்த வீடு ஒன்றையும் வாங்கி, மற்ற மூன்று பெண்களுக்கும் திருமணம் செய்து கொடுத்து மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தனர்.


• கென்யா 1963 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்தது.

மசாலா பாப்கார்ன்

வேலி


நைஜீரியாவில் யூபோர்பியா மெஸ் மாண்ட் என்னும் செடியை வேலியாக அதிகமாக வளர்த்துள்ளார்கள். ஏன் தெரியுமா? இந்தச் செடியை வெட்டிவிட்டு, யாரும் எல்லையைத் தாண்ட முடியாது. காரணம் இச்செடியை வெட்டினால், அதன் தண்டிலிருந்து ஒரு திரவம் பீச்சியடிக்கும். நச்சுத்தன்மை வாய்ந்த அத்திரவம் உடலில் பட்டதும் அந்த இடங்களில் கொப்புளங்களை உண்டாக்கி, தாங்க முடியாத எரிச்சலை ஏற்படுத்தும்.

- எம். வினோத்,
சங்கரன்கோவில்




வங்கி

பண்டைய எகிப்திலும் வங்கி முறை இருந்தது. தங்க மோதிரங்களைத் தட்டுகளில் வைத்து தங்கத்தின் எடையைப் பார்த்து ஒரு சீட்டுத் தருவார்கள். 100



மைலுக்கு அப்பாலுள்ள அந்த வங்கியின் மற்றொரு கிளையில் அந்தச் சீட்டைக் கொடுத்தால், அதே எடையுள்ள தங்க மோதிரங்களைத் தந்து விடுவார்கள். திருட்டுப் பயம் இல்லாமல் தங்கத்தை மற்ற ஊர்களுக்குக் கொண்டு செல்ல இப்படிப்பட்ட வங்கி முறையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் எகிப்தியர்கள்.

-அ. பேச்சியப்பன்,
ராஜபாளையம்



மை

ஆரம்பக் காலத்தில் தபால் முத்திரைகளில் சிவப்பு மையைத்தான் பயன்படுத்தினார்கள். சிவப்பு மையை எளிதில் அழித்து விட்டுப் பழைய தபால் தலையையே பலர் பயன்படுத்தினார்கள். இதனால் ஏமாந்த தபால் இலாகாவினர் இன்றுள்ளது போல் கறுப்பு நிற மையினாலான முத்திரைகளை அமலுக்குக் கொண்டு வந்தனர்.

- வி. ராணி, நாமகிரிப்பேட்டை




வரைபடம்

உலகின் முதல் உலக வரைபடம் கி.மு. 6ஆம் நூற்றாண்டில் அனாக்ஸிமாந்தர் என்ற கிரேக்கத் தத்துவ அறிஞரால் உருவாக்கப்பட்டது. முதலில் பூமியின் மாதிரி வடி


வத்தை கி.மு. 15ஆம் நூற்றாண்டில் கிரேக்க அறிஞர் கிரிதஸ் என்பவர் உத்தேசமாக உருவாக்கிக் காட்டினார். இன்றைய நவீன பூமி உருண்டை 500 ஆண்டுகளுக்கு முன்பு மார்ட்டின் பேஹைம் என்ற ஜெர்மானியரால் உருவாக்கப்பட்டது.

- பேச்சி,
ராஜபாளையம்



தபால் ரயில்

லண்டனில் தெருக்களுக்கு அடியில் தபாலுக்கென்றே பிரத்தியேகமாக ஒரு ரயில்வே இருக்கிறது. உலகத்தில் வேறெந்த



நாட்டிலும் இம்மாதிரி இல்லை. 1927ல் இது போடப்பட்டது. இதில் செல்லும் ரயில்கள் டிரைவர் இல்லாமல் ஓடும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

- நெ. இராமன், சென்னை

உருளைக்கிழங்கு

உருளைக் கிழங்கு முதலில் அறிமுகமானபோது மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெறவில்லை. விவசாயிகளும் இதனைப் பயிரிட விரும்பவில்லை. பிரஷ்யா நாட்டின் அரசன்



முதலாம் ஃபிரடரிக் உருளைக் கிழங்கைப் பயிரிடாத விவசாயிகளின் மூக்கையும், காதையும் அறுக்க ஆணையிட்டான். ரஷ்யாவின் பேரரசன் பீட்டர் உருளைக் கிழங்கை அன்றாடம் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கட்டளையிட்டான்.

- மு. சுகன்யா,
ஆறாம் வகுப்பு,
சுவார்ட்ஸ் மெட்ரிக் பள்ளி, இராமநாதபுரம்

மூக்கு

எகிப்தில் பிரமிட் அருகே உள்ள சிங்க உடல் - மனிதத் தலையுடன் காணப்படும் 'ஸ்பிங்ஸ்' மூக்கை உடைத்தது 1798இல். நெப்போலியன் எகிப்தைப் போரில் வென்ற போது அவரது படைவீரர்கள் வெற்றிக் களிப்பில் ஸ்பிங்ஸின் மூக்கைக் குறி பார்த்து சுட்டு விட்டார்கள். இதையெல்லாம் நெப்போலியன் தடுப்பதற்குள் நடந்துவிட்டது.

- ஏ.உம்மு அத்தியா, லால்பேட்டை




பார்வை

ஆந்தையின் கண் பார்வை மனிதனுடையதைவிட 82 மடங்குக் கூர்மையானது.

பள்ளிக் கூடத்தை ஆங்கிலத்தில் 'ஸ்கூல்' என்பார்கள். அதேபோல் நீர் வாழ் விலங்குகளின் கூட்டத்திற்கும் கூட 'ஸ்கூல்' என்றுதான் பெயர்.

- ஔவை ஏ.எஸ். யோகானந்தம், ஈரோடு



"ஆபரேஷனுக்குப் பிறகு கண் பார்வை எப்படி இருக்கு?"

"கண் பார்வை வர வர மங்கிப் போகுது டாக்டர்..."

"கண் பார்வைக்கும் 'மங்கி'க்கும் சம்பந்தமில்லை... அது எதேச்சையா போயிருக்கும்!"


- தாமு, தஞ்சாவூர்



"ஒரு புத்திசாலி எப்போதும் தன் பக்கத்துலே ஒரு முட்டாளைத்தான் நண்பனா வச்சுக்குவானாம்..."

"என்னை ரொம்பப் புகழாதேடா!"

- தாமு, தஞ்சாவூர்.



"மணி இரண்டாகுது. இன்னும் கால் மணி நேரம்தான் இருக்கு?"

"எதுக்கு?"

"இரண்டே கால் ஆகறதுக்கு!"

- ஜி. கார்த்திகேயன், சென்னை.


நல்லா சிரிங்க!

"அரசே உடம்பு இளைப்பது எப்படிங்கிற விஷயம் அடங்கிய ஓலையை உங்களுக்காக கொண்டு வந்திருக்காங்க."

"யார்?"

"உங்கள் பல்லக்குத் தூக்கிகள்!"


- செ. ஆசைத்தம்பி, சேலம்.



கோவை ஸ்பெஷல்



எம்.சோஃபியா,
எஸ்.ஆர்.எஸ்.ஐ மெட்ரிக் பள்ளி,
காரமடை.



சி.கார்வின்,
எஸ்.வி.வி.எம் பள்ளி, சமத்தூர்.


ம. கிருஷ்ணகுமார்,
எஸ்.வி.வி.எம் பள்ளி,
சமத்தூர்.






எம். வீணா,
ஸ்ரீ சக்தி மெட்ரிக் பள்ளி,
செட்டிபாளையம்.

டி. திவ்யா,
எஸ்.ஆர்.எஸ்.ஐ மெட்ரிக் பள்ளி,
காரமடை.




ஸ்ரீ. வாசவி லக்ஷ்மி,
ஸ்ரீ சௌடேஸ்வரி
வித்யாலயா,
சொக்கம்புதூர்.





டி. தீபன்,
எஸ்.ஜி.வி
மேல்நிலைப்
பள்ளி,
சிறுமுகை.



ஏரியின் அருகில் ஒரு பறவை வாழ்ந்து வந்தது. அது ஒரு விசித்திரமான பறவை. அதற்கு இரண்டு தலைகளும், ஒவ்வொரு தலைக்கும் ஒரு அழகான கிரீடமும் இருந்தன. அதற்கு

இரு தலை பறவை!

அழகான இறக்கைகளும் இருந்தன! மயிலைப் போன்ற அழகான தோகையும் இருந்தது.

அருகிலுள்ள காட்டில் இருக்கும் பறவைகளையெல்லாம் அந்த ஏரி கவர்ந்தது. அந்த விசித்திரமான பறவையைப் பார்க்கவும் அது பாடுவதைக் கேட்கவும் பறவைகள் மறுபடி மறுபடி அந்த

புதிர்

முருகன் வயற்காட்டில் வேலை செய்து திரும்ப நேரமாகிவிட்டது. காலதாமதம் ஆனதற்கு அவன் மனைவி காரணம் கேட்டாள். அதற்கு அவன், பதிலை புதிராய்க் கூறினான்:

''செத்ததால் சாகவில்லை; சாகாவிட்டால் செத்திருப்பேன்'' என்றான்.

''சரி, அதன் பின்பும் ஏன் லேட்?'' என்று மனைவி கேட்டாள்.

அதற்கு கணவன், ''வெட்டியதால் விழவில்லை; வெட்டாவிட்டால் விழுந்திருப்பேன்'' என்றான்.

''அதான் விழவில்லையே! அதுக்கப்புறம் ஏன் லேட்?'' என்று கேட்டாள். அதற்கு அவன் ''வந்ததால் வரவில்லை; வராவிட்டால் வந்திருப்பேன்'' என்று கூறினான். இதைக் கேட்டு மனைவி சமாதானமானாள். விடை உங்களுக்குத் தெரிகிறதா?

புதிர் விடை: முருகன் வரும் வழியில் ஒரு பாம்பை மிதித்துவிட்டான். இவன் மிதித்த காரணத்தால் பாம்பு இறந்துவிட்டது. பாம்பு செத்ததால் இவன் சாகவில்லை; பாம்பு சாகாவிட்டால் இவன் செத்திருப்பான். இதைத்தான் முதல் புதிரில் கூறினான்.

இரவு நேரம் ஆனபடியால் ஓட்டமும், நடையுமாய் விரைந்து

ஏரிக்கு வந்து சென்றன. அவை இரண்டு பழங்களைக் கொண்டு வந்து இரண்டு தலைகளுக்கும் ஒவ்வொன்றாகக் கொடுத்தன. அந்தப் பறவை மிகவும் பெருமைப் பட்டது.

ஒருநாள் தேவதை ஒன்று மிகவும் சுவையான தேனைக் கடவுளுக்கு எடுத்துச் சென்றது. அப்பொழுது அந்தக் கிண்ணம் கை தவறிக் கீழே விழுந்தது. அதிர்ஷ்டவசமாக ஒரு கிளையில் மாட்டிக் கொண்டது. அந்தக் கிளையில் விசித்திரமான பறவை அமர்ந்திருந்தது.

பறவை அந்தத் தேனைப் பார்த்து குடிக்கச் சென்றது. ஒரு தலை அதன் பக்கத்தில் இருந்ததால் அதைக் குடிக்கத் தொடங்கியது. அந்தத் தேன் மிகவும் சுவையாக இருந்தது.

மற்றொரு தலை "நானும் அதைக் குடிக்க வேண்டும்" என்று சண்டை இட்டது. முதல் தலை "நான்தான் இதைக் குடிப்பேன்" என்றது. இரு தலைகளும் மாறி மாறி வாதமிட்டன. இவர்களது சண்டையைக் கேட்ட ராஜநாகம் அதன் பொந்துக்குள் இருந்து வெளியே வந்தது.

அதன் தலையில் ஒரு கிண்ணம் போன்ற வடிவில் விஷம் இருந்தது. அதைப் பார்த்த அந்த இரண்டாவது தலை "நான் இதைக் குடித்து உனக்கு ஒரு பாடம் கற்பிக்க விரும்புகிறேன" என்றது. அது சொன்னபடியே அதைக் குடித்தது. சிறிது நேரத்தில் இரு தலைகளும் இறந்து விழுந்தன. அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த மற்ற பறவைகள், தங்களுக்கு ஒரே ஒரு தலையைக் கொடுத்ததற்காகக் கடவுளுக்கு நன்றி கூறின.

- சே. ஷர்மி,
ஏழாம் வகுப்பு,
வெங்கடலஷ்மி மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி,
சிங்காநல்லூர்,
கோயம்புத்தூர்.

சென்று கொண்டிருந்தபோது மின்னல் வெட்டியது. ஓரடி எடுத்து வைத்திருந்தாலும் பாழும் கிணற்றில் விழுந்திருப்பான். மின்னல் வெட்டியதால் இவன் கிணற்றில் விழவில்லை; மின்னல் வெட்டாவிட்டால் இவன் கிணற்றில் விழுந்திருப்பான்.

நடுஜாமம் ஆனபடியால் மெதுவாக நடக்க ஆரம்பித்தான். அச்சமயத்தில் மழை வந்துவிட்டது. மழை வந்ததால் இவன் வரவில்லை; மழை வராவிட்டால் இவன் வீட்டிற்கு வந்திருப்பான்.

- த. கௌதம்,
எட்டாம் வகுப்பு,
ஏ.எல்.ஜி. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
புலியகுளம், கோவை.



கொங்கு நாட்டுச் சிரிப்பு!



''வாத்தியார்களுக்குப் பிடிக்காத பதில் என்ன?

''தெரியாது சார்!''

''கரெக்ட்!. உட்கார்.''

- சு. கதிர்,
காரமடை.



''டேய்! வாசல்ல லெட்டர் இருக்குது பாரு. எடுத்துட்டு வாடா. யாரு போட்டாங்கன்னு தெரியலேயே?''

''போஸ்ட்மேன்தான் முதலாளி போட்டுட்டுப் போனாரு!''

- சு. கதிர்மதியோன்,
ஒன்பதாம் வகுப்பு,
எஸ்.ஆர்.எஸ்.ஐ. மெட்ரிக் பள்ளி,
காரமடை.

தகவல் துளிகள்...

● கோவை கோனியம்மன் திருக் கோவிலில் உள்ள கோனியம்மன் திருவுருவச் சிலையின் இடதுகாதில் தோடும், வலது காதில் குண்டலமும் அமைந்துள்ளன.

● 2001-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் அதிக மக்கள் தொகை கொண்ட மாவட்டம் கோவை மாவட்டம்தான். இம் மாவட்டத்தின் மொத்த மக்கள் தொகை 42,24,107

● கடையேழு வள்ளல்கள் எழுவரில் ஒருவரான குமணன் என்ற குறுநில மன்னன் ஆட்சி செய்த இடம், கோவை மாவட்டம் உடுமலைப்பேட்டைக்குக் கிழக்கே பத்து கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. அங்கு நிறையப் பழங்காலக் கோவில்கள் உள்ளன. முதலில் குமண லிங்கம் என்ற பெயரில் இருந்த அந்த ஊர் இப்போது குமரலிங்கம் என்று மாறி உள்ளது.

● மிஸ்டர் பணியாரம், பாறாயி, ஹலோ வாங்க வாங்க, அடேங்கப்பா - இவையெல்லாம் எங்கள் ஊரில் உள்ள சில உணவகங்களின் பெயர்கள்!

● தாந்தோணி படகு அல்ல; தூங்காவி நிறமல்ல; மெட்ராத்தி மொழியல்ல; இவை உடுமலையில் இருந்து தாராபுரம் செல்லும் வழியில் அருகருகே உள்ள கிராமங்களின் பெயர்கள்தான்!

- எஸ்.பொன்னுசாமி,
உடுமலை.



"என் பையன் உண்டியல் மாதிரி!"

"ஏன் இப்படி சொல்றே?"

"அட, எவ்வளவு காசு கொடுத்தாலும் திருப்பித் தர மாட்டேங்கிறான்."

- மு. சுபத்ரா, பதினோராம் வகுப்பு,
ஜெய் வாபாய் நகர மேல்நிலைப்பள்ளி,
திருப்பூர்.



"பாப்பா ஏன் அழறே?"

"என் கூட வாக்கிங் வந்த நாயைத் திடீர்னு காணோம். கூட்டத்துல மிஸ் ஆயிடுச்சு."

"கவலைப்படாதே... நாய்க்கு அறிவு ஜாஸ்தி. எப்படியும் வந்துடும். நீ வீட்டுக்குப் போ."

"நான் எப்படி போறது? வீட்டுக்குப் போற வழி அதுக்குத்தானே தெரியும்!"

- த. திவ்யா, ஒன்பதாம் வகுப்பு,
எஸ்.ஆர்.எஸ்.ஐ. பள்ளி, காரமடை.

"பூனை ஏன் பால் சாப்பிடுது பாலு?"

"அதுக்கு டீ, டிக்காஷன் கலந்து போடத் தெரியாதே. அதனாலதான்!"

- சோ. சுரேஷ் ஆதித்யா,
சூலூர்.




புகழ் பெற்ற கோயில்கள்


கொங்குத்தமிழ் கொஞ்சி விளையாடும் மாவட்டம் எங்கள் கோவை மாவட்டம். இங்குள்ள பிரசித்தி பெற்ற கோயில்கள்:

பேரூர் பட்டீஸ்வரர் கோயில், மருதமலை முருகன் கோயில், கோனியம்மன் கோயில், தண்டுமாரியம்மன் கோயில், ஆனைமலை மாசாணியம்மன் கோயில், மேட்டுப்பாளையம் வனபத்திரகாளியம்மன் கோயில், ஈச்சனாரி விநாயகர் கோயில், வெள்ளியங்கிரி மலை, அனுவாவி சுப்பிரமணியர் கோயில், வாழைத்தோட்ட அய்யன் கோயில், காரமடை ரங்கநாதர் கோயில்.

- எஸ். வினுபார்கவி, மூன்றாம் வகுப்பு,
திருவள்ளுவர் பிரிபரேட்ரி பள்ளி,
மடத்துகுளம்.



பொன்மொழிகள்



1. நம்பிக்கையோடு செய்யப்படும் பிரார்த்தனை, நோயாளிகளின் உயிரை மீட்கும்.
2. துன்பத்தில் இருப்பவனை உடனே போய்ப்பார். செல்வத்தில் இருப்பவன் கூப்பிட்டால் போ.
3. வாழ்வு என்பது ஒரு புகைப்படம்.
4. மனிதன் வெறும் உணவினால் மட்டும் உயிர் வாழ முடியாது.
5. நம்பிக்கைதான் நமது வாழ்க்கையை வளமூட்டுகிறது.

- இரா. சம்பத்குமார், ஏழாம் வகுப்பு, ஸ்ரீவாகீஸ்வரி வித்யாமந்திர், சமத்தூர், பொள்ளாச்சி.

அறுபடை வீடு

கோவையிலிருந்து 20 கி.மீ தூரத்தில் உள்ள சூலாரில் குமரக் கோட்டம் என்ற முருகன் கோயில் அண்மையில் கட்டப்பட்டு உள்ளது. இங்கு அறுபடை வீட்டு முருகர்களையும் ஸ்தாபித்து உள்ளார்கள். அறுபடை வீடுகளுக்குச் செல்ல இயலவில்லையே என்ற குறையை இக் கோயில் தீர்த்துள்ளது. கோயிலைச் சுற்றி அழகான பூச்செடிகளையும், மரங்களையும் வளர்த்து, கோயிலை மேலும் அழகு படுத்தியுள்ளனர். கோவைக்கு வந்தால் கண்டிப்பாக குமரக்கோட்டம் முருகனையும் அவசியம் தரிசித்து விட்டுச் செல்லுங்கள்.

- ஸ்ரீ. வாசவி லக்ஷ்மி, ஸ்ரீ சௌடேஸ்வரி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, கோவை.

தேன் பொழியும் ஊர்!

கொங்கு தமிழ் மணக்கும் கோவை மாவட்டம் சங்க காலத்தில், கொங்கு நாட்டின் ஒரு பகுதியாக இருந்தது. கொங்குத் தமிழ், தனிப்பெருமை வாய்ந்தது. இன்றைய கோவை, சேலம், ஈரோடு, நீலகிரி பகுதிகள் அடங்கியதே கொங்கு நாடு என அழைக்கப்பட்டது.

கொங்கு என்றால் தேன் எனப் பொருள். அதன் பெயருக்கேற்ப தேன் பொழியும் மலைவளம் நிறைந்தது கொங்கு நாடு. கிழக்கே ஆற்காடும், மேற்கே கேரளாவும், வடக்கே கர்நாடகமும் தெற்கே திருச்சியும் கொங்கு நாட்டின் எல்லைகளாக இருந்தன.

பெயர்க் காரணம்?

கோவன் என்பவன் ஆட்சி செய்ததால் இவ்வூர் 'கோவன் புத்தூர்' என்று அழைக்கப்பட்டுப் பிறகு கோயம் புத்தூர் ஆனது. கோவையிலுள்ள கோனியம்மன் பெயரால் 'கோனியம் புதூர்' என அழைக்கப்பட்டு அதுவே 'கோயம்புத்தூர்' ஆகியது என்றும் கூறுவர்.

1799-ல் திப்புசுல்தானின் வீழ்ச்சிக்குப் பிறகு, ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்குள் இருந்தது.

இதன் வடக்கிலும் கிழக்கிலும் ஈரோடு மாவட்டமும், மேற்கிலும் தெற்கிலும் மேற்குத் தொடர்ச்சி மலையும், ஆனை மலைத் தொடரும் எல்லைகளாக அமைந்துள்ளன.

இங்கு பஞ்சாலைகள், நூற்பாலைகள் அதிகம். இது தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படுகிறது. மின்சாரப் பொருட்கள், இயந்திர சாதனங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் தயாரிப்புத் தொழிற்சாலைகளும் உண்டு. காடம்பாறையில் நீர்மின் விசை உற்பத்தி

செய்யப்படுகிறது. திருப்பூர் பனியன் தொழில் மிகப் பெரும் அன்னியச் செலாவணியைப் பெற்றுத் தருகிறது.


காசியில் வாசி அவிநாசி

கோவைக்கு வடகிழக்கில் 40 கி.மீ தொலைவில் இருப்பது அவிநாசி. இதன் இன்னொரு பெயர் புக்கொளியூர். இங்குள்ள அவிநாசியப்பர் கோயில் மிகப் பெரியது. இது குலோத்துங்கச் சோழன் கட்டியது. பாண்டிய மன்னர்களும், மைசூர் அரசர்களும் திருப்பணிகள் செய்துள்ளனர்.

காசி விசுவநாதரின் வேரில் தோன்றிய சுயம்பு மூர்த்திதான், அவிநாசியப்பர் என்பார்கள். இதனால் 'காசியில்வாசி அவிநாசி' என்றும், 'தென்காசி' என்றும் இதனைச் சொல்லுகிறார்கள்.

கோவையின் எல்லை


கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை எதிரில் கிறிஸ்துநாதர் ஆலயம் உள்ளது. ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்தே இந்த ஆலயம்தான் கோவை நகரின் எல்லைத் தொடக்கமாக உள்ளது.



கோவைக் குற்றாலம்

நெல்லை மாவட்டத்தில் மட்டுமல்ல. கோவை மாவட்டத்திலும் குற்றால அருவி உள்ளது. கோவையிலிருந்து சுமார் 30 கி.மீ தூரத்தில் இயற்கைச் சூழலுடன் இது அமைந்துள்ளது. இதைக் கோவைக் குற்றாலம் என்கிறார்கள்.

கொட்டும் தண்ணீரில் ஆனந்தமாகக் குளித்து மகிழலாம். கோவையிலிருந்து சிறுவாணி செல்லும் பேருந்தில் செல்ல வேண்டும். வனச்சோலை சாவடி என்ற இடத்தில் இறங்கி இரண்டரை கிலோமீட்டர் தூரம் நடந்தால் கோவைக் குற்றாலத்தை அடையலாம். இங்கு



படப்பிடிப்புகள் அதிகம் நடக்கும்.

கோவையில் புகழ் பெற்றவை

திருப்பூர் - பனியன், அவிநாசி அவல், பொள்ளாச்சி - சந்தை, காரமடை - காராச்சேவு, சிறுவாணி - தண்ணீர், கிணத்துக்கடவு - வாழைப்பழம், போத்தனூர் - ஓமப்பொடி.

- வி. மீனாட்சி, ஆறாம் வகுப்பு,
காமராஜர் மெட்ரிக்குலேஷன் பள்ளி,
டாடாபாத், கோவை.

நிலையான தோல்வியல்ல!

செல்வனே,
நீ ஏழைகள் ஆயிரம்
பேருக்கு எஜமானாக
இருக்கலாம்...
ஈ, எறும்பு
ஒன்றுக்காவது எஜமானாக
முடியுமா?

உன் பத்து ரூபாய்
நோட்டுக்குப் பத்துப் பேர்
வரலாம், பத்தாயிரம்



நீட்டு, ஒரு பட்டாம்பூச்சி வருமா?
உட்கார்ந்திருப்பது உன்
தோட்டத்துப் பூவில்
என்றாலும், உன்
வருகையைக் கண்டு
வண்டு எழுந்திருக்குமா...?

நீ ஒரு தேன்கூட்டைத்
தொடு, நீ செல்வனாயிற்றே என்று
ஒரு தேனியாவது உன்னை
முத்தமிட்டுப் பறக்குமா...?

நீயும் உன் பணமும் பெறுவது
நிலையான வெற்றியுமல்ல,
நாங்களும் எங்கள்
ஏழ்மையும் பெறுவது
நிலையான தோல்வியுமல்ல!

- வி. பாலகிருஷ்ணன், ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரீ சக்தி மெட்ரிகுலேஷன்
மேல்நிலைப்பள்ளி,
செட்டிபாளையம், கோவை.

பரிசு!

மனிதா
தாய்க்குப் பாசத்தைப் பரிசாகக் கொடு;
நண்பனுக்கு நட்பைப் பரிசாகக் கொடு.
பகைவனுக்கு
மன்னிப்பைப் பரிசாகக் கொடு
ஏழைக்குப்
பரிவைப் பரிசாகக் கொடு
உழைப்புக்கு
வெற்றியைப் பரிசாகக் கொடு
வெற்றிக்கு
நேர்மையைப் பரிசாகக் கொடு.
உண்மைக்கு
உறுதியைப் பரிசாகக் கொடு.
உறுதிக்கு
மனவலிமையைப் பரிசாகக் கொடு
வீரத்தை
நாட்டிற்குப் பரிசாகக் கொடு
நாட்டிற்கு
உன்னையே பரிசாகக் கொடு
அதுவே
உலகில் உயர்ந்த பரிசு!

- எஸ். சரண்யா, ஒன்பதாம் வகுப்பு,
எஸ்.ஐ.வி.எம்.டி.ஆர். மேல்நிலைப்பள்ளி,
சிறுமுகை, கோவை.

சொர்க்கம் காணட்டும்!

சாதிப்பேயும் மதவெறியும்
சாம்பலாகிப் போகட்டும்!
மோதிச் சாயும் போர் நீங்கி
மனித சாதி வாழட்டும்!
மதங்கள் யாவும் சேரட்டும் - அன்பின்
உறவில் சொர்க்கம் காணட்டும்!

- ஆர். கல்பனா, ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரீ சக்தி மெட்ரிகுலேஷன்
மேல்நிலைப்பள்ளி,
செட்டிபாளையம், கோவை.

திருவாழத்தான்



விநோத பிராணி பூகசேநா!

கோணாமாணாங்குப்பத்தில் கழுதை, நாய், பூனை, சேவல் என நான்கும் ஒற்றுமையாக நட்புடன் இருந்தன. ஒவ்வொன்றும் இரை தேடிச் சென்று திரும்பும்போது, மற்றவற்றுக்கான இரை எங்கு கிடைக்கிறது என்று வந்ததும் சொல்லும். புதிய சினிமா போஸ்டர்கள் கீழாகச் சுவர்களில் ஒட்டப்பட்டு இருந்தால், அவற்றைப் பார்த்துவிட்டு வந்து, கழுதையிடம் நாய் சொல்லும். எங்காவது ஒரு வீட்டில் விசேஷம், சிறப்பு நிகழ்ச்சி என்றால், பூனை வந்து நாயிடம் சொல்லும். பசை உலராத போஸ்டர்களைக் கழுதை தின்னச் செல்லும். எச்சில் இலைக்காக நாய் சம்பந்தப்பட்ட வீட்டின் எதிரே உட்கார்ந்து காத்திருக்கும்.

ஒரு சமயம் புதிதாக ஒரு பன்றி கோணாமாணாங்குப்பத்துக்கு வந்துவிட்டது. கொழுத்து இருந்தது. என்னதான் கொழுத்துக் கிடந்தாலும், வேளைக்கு இரை வேண்டும் என்பது உயிரினங்கள் இயல்பு.

குப்பத்தில் பன்றி திரிந்தது. அதைக் கண்டு நம் நாய் உறுமிப் பார்த்தது. குரைத்தது. நான்கு கால்களாலும் நிலத்தைப் பிறாண்டி, பாயப் போவதாகப் பந்தா காட்டியது. ஊஹும், கொழுத்த பன்றி கண்டு கொள்ளவே இல்லை. இதற்கு முன்னால் பல நாய்களைக் கண்டு, நாய்களின் இயல்பு தெரிந்த பன்றி.

இப்படி தனக்குப் போட்டியாகக் குப்பத்துக்கு ஒரு பன்றி வந்துவிட்டது என்றும், ஏற்கெனவே போதும் போதாமலிருக்கும் குப்பத்துக் குப்பை மேட்டுத் தீனி தனக்குக் கிட்டாமல் போய்விடும் என்றும், தான் வேறு எங்காவது ஒரு மாணாங்கோணாங்குப்பம் செல்ல வேண்டி உள்ளது என்றும் வருத்தத்தோடு நாய் சொல்லியது.

நாய் சொல்லியதைக் கேட்டதும், கழுதை, பூனை, சேவல் மூன்று நண்பர்களுக்கும் வெகு கவலையாகிவிட்டது. நண்பனைப் பிரிவது என்றால், எவருக்கும் கவலை ஏற்படத்தான் செய்யும். பிராணிகளுக்கும்,

பறவைகளுக்கும்கூட.

குப்பத்திலேயே நாயை இருக்க வைக்க என்ன செய்யலாம் என்று மூன்று நண்பர்களும் யோசித்தன.

சேவல், "இப்படி செய்தால் என்ன?" என்றது.

"எப்படி செய்தால் என்ன?" கழுதை கேட்டது.

"யோசிக்க வேண்டிய சமாச்சாரம்" என்றது சேவல்.

யோசித்தன.

"இப்படி செய்தால் என்ன?" பூனை சொல்லியது.

"எப்படி செய்தால் என்ன?" சேவல் கேட்டது.

"நாம் நால்வரும் சேர்ந்து மறைந்து நிற்போம். இரை தேடி பன்றி மூஸ்மூஸ்



என்று வரும். அப்போது நாம் நால்வரும் ஒரே நேரத்தில் குரல் கொடுப்போம். இது ஏதோ புது மிருகம் என்று நினைத்து, பயந்து போய் பன்றி ஓடி விடும்."

"சரியான யோசனை!" என்று சொல்லிய கழுதை, பூனையைத் தட்டிக் கொடுக்க,

"அந்தப் பன்றியைக் கோணாணாங்குப்பத்திலிருந்து விரட்டி விடலாம்."


"எப்படி விரட்டுவது?"



திரும்பித் தன் பின்காலை உயர்த்தியது. கழுதையின் பழக்கம் தெரிந்த பூனை, சட்டென்று நகர்ந்து கொண்டது.

கோணாமாணாங்குப்பத்தில் நன்கு பரந்து வளர்ந்த பெரிய புளிய மரம் ஒன்று இருந்தது. அதன் பக்கத்தில் குப்பத்து மனிதர்கள் குப்பைகளைக் கொண்டுவந்து குவிப்பார்கள். மரத்தின் அருகிலேயே சாக்கடையும் ஓடியது. இந்த இடம் நம் பன்றிக்கு சுவர்க்கம். சுற்றி இரை தேடித் தின்று விட்டு வரும் பன்றி, குப்பையில் உருண்ட பிறகு, சாக்கடை நீரில் படுத்துப் புரளும்.

பன்றி இல்லாத சமயம் பார்த்து புளிய மரத்தின் பக்கத்தில் மறைவாக நான்கும் நின்று கொண்டு பன்றி வரும் வழியைப்



பார்த்துக் கொண்டிருந்தன. பன்றியும் வந்தது. 'மூஸ், மூஸ்' என்றபடி பன்றி அருகில் நெருங்கியதும் நண்பர்கள் நான்கு பேரும் சேர்ந்தாற் போலக் கத்தினார்கள்.

''கொக்கரக்கோ மியாவ் மியாவ் லொள் லொள் பேஹே பேஹே...''

அவ்வளவுதான். குரலைக் கேட்டதும், பன்றியின் மேல் முடிகள் முட்களாகச் சிலிர்த்தன,. திடுக்கிட்டு, மிரள மிரளப் பார்த்து நின்றது. ஒரு குதி குதித்துத் திரும்பியது. ஓட்டம்! பன்றி அப்படி ஓடுமோ? போட்டி வைத்திருந்தால், குதிரை தோற்று இருக்கும்.

ஓடும் பன்றியைப் பார்த்து நான்கு நண்பர்களும் தரையில் விழுந்து புரளாத குறையாகச் சிரித்தன. சிரித்த சிரிப்பில், கழுதைக்கு இடுப்பு சுளுக்கிக் கொண்டது.

பன்றி சென்றுவிட்டது. நான்கு நண்பர்களும் மகிழ்ச்சி அடைய வேண்டும் அல்லவா? அதுதான் இல்லை. வருத்தத்துடன் எதையோ இழந்தது போலத் திரிந்தன.

கடைசியாக நாய், ''நாம் தப்புப் பண்ணிட்டோம். அந்தத் தப்புக்கு நான்தான் காரணம்'' என்று கூறி



50000 டாலர்

ஜேம்ஸ் வர்த்தமான் எனும் அமெரிக்கர் 1984ல் 2800 விதமான பறவைகளைக் கண்டுகளித்து உலக சாதனை புரிந்து இருக்கிறார். இதற்காக அவர் செலவழித்த தொகை 50000 டாலர்கள்.

- ஆர். ஆர். பூபதி

அழுதது. நாய் அழுகிறது என்றால், ஊளை இடுகிறது என்று அர்த்தம்.

''என்ன தப்புப் பண்ணிட்டோம்? சொல்லிவிட்டு 'அழு'' என்றது கழுதை.

''பன்றியைத் துரத்தி இருக்கக் கூடாது.''

மற்ற மூன்றும் நாயை வியப்புடன் பார்த்தன.

''உனக்காகத்தானே நாங்களும் சேர்ந்து பன்றியை விரட்டினோம்'' என்றது பூனை.

''ஆமாம். இப்போது வருத்தப் படுகிறாயே!'' என்றது சேவல்.

''நாம் உயிர் வாழ்வதைப் போல, அந்தப் பன்றிக்கும் வாழ உரிமை உண்டு'' என்றது நாய்.

''உண்டு''. கழுதை தன் பின் காலால் தரையை உதைத்தது.

''இந்தக் கோணாமாணாங்குப் பத்துலே நாம் மட்டும்தான் வாழ வேண்டும் என்ற எண்ணம் தப்பு. யார் வந்தாலும், வரவேற்று, வாழ வசதி செய்து கொடுக்க வேணும். அப்படி வசதி செய்து கொடுக்கா விட்டாலும், துரத்தாமலாவது இருக்க வேண்டும்'' - நாய் சொல்லியது.

கழுதை, பூனை, சேவல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டன.

''நன்று'' என்றது சேவல். செந்தமிழ்ச் செல்வர் என்பவரின் வீட்டுச் சேவல் அது.

''நாம் போய், தேடி, பன்றியை அழைத்து வருவோம்.''

பன்றி சென்ற திக்கு நோக்கி, நான்கும் பிரிந்து சென்றன. குப்பை மேடு, சாக்கடைப் பள்ளம் என்று பார்த்துப் பார்த்துத் தேடின.

கடைசியாகக் கழுதை கண்டுபிடித்தது.

போனான் வந்தான் குப்பத்துக் குப்பை மேட்டில் குப்புறக் கவிழ்ந்து பன்றி படுத்திருந்தது.

''பன்றியே, பன்றியே!'' கழுதை அழைத்தது.

தலை நிமிர்ந்து பார்த்தது பன்றி.

''நீ ஏன் கோணாமாணாங்குப்பத்தை விட்டு வந்துவிட்டாய்?''

''உர்ர்ர்...'' உறுமியது பன்றி. அதன் பழக்கம். ''அங்கே இருக்கற கழுதை அல்லவா நீ?''

''ஆமாம்.''

''உங்க குப்பத்துலே ஒரு பயங்கர மிருகம் இருக்கு. அது கத்திய கத்தலைக் கேட்டு நான் ஓடி வந்தேன். கத்தலா அது? முழக்கம். கத்தலே அப்படி இருந்தது என்றால், எத்தனை பெரிதாக அது இருக்க வேண்டும்! அது என்னைக் கொன்று விழுங்கி விடுமோ என்ற பயம் வந்துவிட்டது. ஓடி வந்து விட்டேன்.''

கழுதை சிரித்தது. ''நீ நினைப்பது போல, அது ஒன்றும் அத்தனை பெரிய மிருகம் அல்ல.''

''பின்னே?''

''பூகசேநா அது.''

''பூகசேநாவா? அப்படி ஒரு மிருகம், பிராணி இருக்கா, என்ன?''

''நீ பார்க்கவில்லையா?''

''பார்க்கலே. குரல் கேட்டு, அலறி அடிச்சுக்கிட்டு ஓடி வந்துட்டேன்.''

''அதை நாங்கள் விரட்டி விட்டோம்.''

''நாங்கள் என்றால் யார், யாரு?'' பன்றி கேட்டது.

''பூகசேநா... இல்லை, இல்லை, பூனை, கழுதை, சேவல், நாய் ஆகிய நண்பர்களான நாங்கள் நால்வரும் பூகசேநாவை விரட்டி விட்டோம். ஆகவே, நீ திரும்பவும் கோணாமாணாங்குப்பத்துக்கு வரலாம். வந்து எங்களோடு நட்புடன் இருக்கலாம், திரியலாம்.''

''சரி'' என்று கூறி, கழுதையுடன் பன்றி புறப்பட்டது.

நாய், பூனை, சேவல் வரவேற்றன. இப்போது கோணாமாணாங்குப்பத்தில் ஐந்து நெருக்கமான நண்பர்கள் இருக்கிறார்கள்.



சம்பளக் கல்!

நன்றிக்கு வித்தாவேன்
நாயுமல்ல...
வீரத்தின் விளை நிலம்
வாளுமல்ல...
உயிர்திரவ மேலாளன்
இரத்தமல்ல...!
உணவுக்கு உயிர் நாடி
அரிசியல்ல..!

- நான் யார்? என்ன, உங்களால் சொல்ல முடியவில்லையா? ஒரு 'க்ளூ' தருகிறேன். சொல்லுங்கள் பார்க்கலாம். 'நீரின்றி அமையாது உலகு: ——— இன்றி அமையாது உணவு' இன்னும் தெரியவில்லையா?

பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு, நீருடன் இணைந்ததால், புவியில் உயிர் உருவாக வழி கோலியது. ஒரு காலத்தில் இதன் எடைக்கு இணையாகத் தங்கத்தைக் கொடுத்துப் பண்டமாற்றுப் பொருளாக இதனை மக்கள் பெற்றனர் என்றால், இதன் மதிப்பை எண்ணிப் பாருங்கள். வாணிகம், நாகரிகம், ஏன் அரசியல்கூட, இப் பொருளைச் சுற்றியே உருவாகி, வளைய வந்திருக்கிறது. சுதந்திரப் போராட்டத்தில் முக்கியப் பங்கு வகித்தது இதுதான்! இப் பொருள் உங்கள் உடலில் இல்லையென்றாலும் உயிர் பிரிந்துவிடும்; அதிகம் ஆனாலும் அதே நிலைமைதான்! இது எல்லா இடங்களிலும் இப்பொழுது மலிவாக, தாராளமாகக் கிடைக்கிறது. ம்... உப்புதான்! சந்தேகமின்றி உப்பு என்பது பாறைதான்; ஆனால் உயிரின் பாறை!

அடுப்பங்கரையிலிருந்து, அணு உலை வரை அனைத்து இடங்களிலும் கிட்டத்தட்ட 14000 பயன்பாடுகளைக் கொண்டது உப்பு. உப்பை வைத்து ஓராயிரம் பழமொழிகள் வழக்கத்தில் உள்ளன. 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை', 'உப்பு போட்டுச் சோறு தின்கிறாயா?', 'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே'. உப்பும், மஞ்சளும்தான் நல்ல காரியங்களுக்கும், கெட்ட காரியங்களுக்கும், மதச் சடங்குகளுக்கும், கடவுளுக்குப் படைக்கவும், முதன்மையாய்ப் பயன்படுகின்றன. நம் வீட்டுக்கு வரும் விருந்தினர்களுக்கு உணவு பரிமாறும்போது, இலை போட்டதும், முதலில் உப்பைத்தான் இலை ஓரத்தில் வைப்பார்கள். புது வீடு குடிபுகும்போதும் உப்புதான் முதலில் கொண்டு போய் வைக்கப்படுகிறது.

எஸ். மோகனா


மக்களின் வாழ்வியலில் உப்பு இரண்டறக் கலந்துவிட்டது.

வரலாற்றுக்கு முந்தைய கால கட்டத்தில் மனிதன் தனக்கு வேண்டிய உப்பை, பச்சை மாமிசத்திலிருந்தே பெற்றான். பின் நாகரிகம் வளரத் துவங்கி, விவசாயம் செய்ய ஆரம்பித்த பின், தாவரங்கள் உணவுப் பொருட்களாயின. தாவர உணவிலிருந்து கிடைக்கும் உப்பு உடலுக்குப் போதுமானதாக இல்லை. எனவே மனிதன் உப்பைத் தேடிச் செல்லும் நிலை ஏற்பட்டது. அப்போது உப்பு நீர் ஊற்றுகளும், உப்புநீர் சதுப்பு நிலங்களுமே, மனிதனுக்கு உப்பைத் தரும் இடங்களாக இருந்தன. அதன் பின்னர், மனிதனின் நாகரிக வளர்ச்சிப் போக்கில், உப்பின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆனது

கி.மு. 2200ல் சீனச் சக்கரவர்த்தியான 'யூ' என்பவரின் ஆட்சியில், அரசின் வருமானத்தில் பெரும்பகுதி 'உப்பு வரி' யிலிருந்தே கிடைத்ததாம். உப்பைப் பற்றிய மிகப் பழமையான சான்றுக் குறிப்புகள் கி.மு. 2700லிருந்து கிடைத்துள்ளன. அந்தக் காலத்திலேயே 'பெங்காவூ-கான்-மூ' என்பவர் 40 வகையான உப்புகளைப் பற்றிக் குறிப்பிட்டு எழுதியுள்ளார். எகிப்தியர்கள் மம்மிகளைப் (இறந்த உடல்களைப் பதப்படுத்துதல்) பதப்படுத்தவே, பெரும்பாலும் உப்பைப் பயன்படுத்தினர். மம்மிகளுக்கும், உணவுப் பதப் படுத்தலுக்கும் நிறைய ஒற்றுமை உண்டு. 19ம் நூற்றாண்டில், தெபெஸ் நாட்டின் கல்லறைகளிலிருந்து 'மம்மிகள்' கெய்ரோவிற்குக் கொண்டு வரப்பட்டன. அப்பொழுது நாட்டிற்குள் நுழைவதற்காக, அதன் மீது உப்பு வரி விதிக்கப்பட்டது.

முந்தைய பழைமையான நாகரிகங்களில், உப்பைத்தான் பணமாகப் பயன்படுத்தினர். எதியோப்பியா மற்றும் திபெத்தில் 'உப்புக் கட்டிகள்' சம்பளமாகக் கொடுக்கப்பட்டன. ரோமானியப் படையில், ராணுவ வீரர்களுக்கு உப்புக்காக அகவிலைப்படி தர வேண்டியிருந்தது. அதனை லத்தீன் மொழியில் 'சாலரியம்' என்று சொல்கின்றனர். பின்னர் உப்பு (salt) என்னும் பொருள்பட, சாலரி (salary) என்ற ஆங்கில வார்த்தை சம்பளம் என்பதைக் குறிக்க உருவானது. வாணிகத்தில் உப்பு முக்கியப் பண்டமாற்றுப் பொருளாக விளங்கியது. பழங்கால ஆதிவாசிகளில் சில வகையினர், உப்பை வாங்குவதற்கு எடைக்கு எடை தங்கம் கொடுத்தனர். எனவே உப்பை, 'வெள்ளைத் தங்கம்' என்று அழைத்தனர். ரோம் நகரம் உப்பு வாணிகத்தின் மையமாகத் திகழ்ந்தது. பின்னர் வெனிஸுக்கு உப்புமையம் மாறியது. கி.மு.506ல் ஆஸ்திரியாவின், ரோம் நகரத் துறைமுக, உப்பு வணிகர்கள் உப்பின் விலையை மிகவும் உயர்த்தினர். எனவே அந்நாடு அத்தொழிலை எடுத்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

உப்பின் மாற்றமுடியாத தூய்மை, புனிதத்தன்மை கருதி, பல்வேறு கலாசார, சமயச் சடங்குகளில் உப்பு பெரும் பங்கு வகிக்கிறது. பைபிளிலும்கூட உப்பு தருவது குறித்து சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. யூதர்களின் பண்டைய கோவில்களில் 'உப்பு அறை' என்ற பகுதி காணப்படுகிறது.



* உப்பு மூலம் பாதுகாக்கப்பட்ட மம்மி

வீட்டுக்கு வரும் விருந்தாளிகளுக்கு உப்பும், ரொட்டியும் தருவது, சில கலாசாரங்களில் வழக்கமாகவே கடைப்பிடிக்கப்படுகிறது.

அமெரிக்கப் புரட்சியின்போது, புரட்சியாளர்களுடன் நடத்திய சண்டையில்

பிரிட்டிஷாரின் முக்கியத் தந்திரமே, புரட்சிக்காரர்களுக்கு உப்பு கிடைக்காமல் தடை செய்வதுதான். ஃபிரெஞ்சு ஆட்சியில் உப்பின் மேல் வரி விதித்ததால்தான், 1789ல் ஃபிரெஞ்சுப் புரட்சி வெடித்தது. எதியோப்பாவில், உப்புச் சில்லுகளைப் பணமாகப் பயன்படுத்தினர். அது மட்டுமல்ல, அரசின் கருவூலங்களில் உப்புப் பாளங்களைப் பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருந்தனர்.

இன்று, நம் பூமியில் இயற்கையாகவே கிட்டத்தட்ட எல்லா இடங்களிலும், தாராளமாக உப்பு கிடைக்கிறது. ஆனால் உப்பு இருப்பது பற்றி 20-ம் நூற்றாண்டுவரை, அவ்வளவாகத் தெரியாதிருந்தது. அதனாலேயே உப்புக்கு வரி விதிக்கப்பட்டது; பாதுகாக்கப்பட்டது; வாணிகம் நடத்தப்பட்டது; ஏன் போர்கூட உப்பினால் மூண்டது. ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்த உண்மை தெரிந்திருந்தால், உலகின் சரித்திரம்கூட வேறு வகையில் மாறியிருக்கலாம்.

இந்தியாவிலும்கூட, கிழக்கிந்தியக் கம்பெனி ஆதிக்கத்தின்போது உப்பு இறக்குமதி செய்யப்பட்டு, வரி விதிக்கப்பட்டது. உப்புக் காய்ச்சுவது குற்றமாகக் கருதப்பட்டது. இதனை எதிர்த்து உப்பு காய்ச்சுவதற்காக, காந்திஜி இந்தியா முழுவதும் அறைகூவல் விடுத்து, உப்பு சத்தியாகிரகத்தை 1930, மார்ச் 12ல் சபர்மதி ஆசிரமத்திலிருந்து தொடங்கினார். இது இந்தியாவின் விடுதலைப் போரின் முக்கியக் கட்டம்.

பூமியிலுள்ள பெருங்கடல்களிலுள்ள உப்பு 4.5 மில்லியன் கன மைல்கள் உள்ளன. இதனை அப்படியே அமெரிக்கா மீது கொட்டினால், அமெரிக்காவில் ஒரு மைல் உயரமுள்ள 'உப்பு மலை'யை எழுப்பி விட முடியும்!

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு

வழக்கம் போல் இந்தப் பரிசுப் போட்டியில் நிறையப் பேர் கலந்து கொண்டனர். அவர்களில் பாதிப்பேர் எட்டாவது கேள்விக்குத் தவறான பதில் அளித்திருந்தனர். சரியான பதில் அளித்தவர்களில் இருந்து 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:



சரியான விடை:

1: ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்சன் - டென்மார்க்

2. உலகிலேயே பெரிய மசூதி - லாகூர்

3. வியட்நாம் - ஹோசி மின்

4. எகிப்து - கெய்ரோ

5. தலைமை உலகச் சுகாதார நிறுவனம் - ஜெனிவா.

6. கொசு - மலேரியா

7. வானவில்

8. கோபிசந்த்

பரிசு பெற்றவர்கள்:

1. சாலை சந்திரகலா நான்காம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, மெய்வழிச்சாலை, புதுக்கோட்டை மாவட்டம்.

2. மு.ஜ. சமிவுதீன், எட்டாம் வகுப்பு, அனிதா குமரன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தண்டுபத்து, தூத்துக்குடி மாவட்டம்

3. ஆர். அமர்நாத், பன்னிரண்டாம் வகுப்பு, ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா, பெரியநாயக்கன்பாளையம், கோவை மாவட்டம்.

4. மு. மஞ்சுளா, ஆறாம் வகுப்பு, அரசினர் உயர்நிலைப்பள்ளி, மணல்மேடு. நாகை மாவட்டம்.

5. சி. வைத்யநாதன், சி.எஸ்.ஆர் (எம்) பள்ளி, திருநகர், மதுரை.


பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்.
கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி.

கோகுலம் போஸ்டர்



* அலிகா கிளேபனோவா, சானியா மிர்ஸா

விம்பிள்டன் வென்ற சா





படங்கள்: நன்றி 'தி



டாக்டர் கு. கணேசன்



வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகுமா?

● சு. நலங்கிள்ளி, தஞ்சாவூர் - 9.

? நம் உடலில் வியர்வை சுரப்பது ஏன்? இதனால் என்ன நன்மை?

! நம் தோலுக்குப் பல பணிகள் உண்டு. அதில் முக்கியமானது உடலின் வெப்பத்தை இயல்பான அளவில் வைத்திருக்க உதவுவது. இதற்குத் தோலில் உள்ள வியர்வைச் சுரப்பிகள் பயன்படுகின்றன. பெருமூளையின் துணையோடு இப்பணியை இவை செய்கின்றன. வெயிலினாலோ, கடின உழைப்பினாலோ அல்லது நோயினாலோ உடலின் வெப்பம் அதிகரித்து விட்டால், தோலில் உள்ள நரம்புகளால் அது உணரப்பட்டு, மூளைக்குத் தகவல் தெரிவிக்கப்படுகிறது. பெரு மூளையில் ஹைப்போதலாமஸ் பகுதியில் வெப்ப மையம் உள்ளது. இதில் மூன்று பகுதிகள் உள்ளன. 1. சூடேற்றும் மையம். 2. குளிர்விக்கும் மையம். 3. கட்டுப்பாட்டு மையம். உடலின் வெப்பம் அதிகமானதும் குளிர்விக்கும் மையம் உடனே செயலில் இறங்கி வியர்வைச் சுரப்பிகளைத் தூண்டிவிட, வியர்வை சுரக்கிறது. இரத்தத்திலிருந்து நீர், யூரியா, சோடியம் போன்றவை வியர்வை மூலம் மயிர்க்கால்கள் வழியாக வெளிவந்து, தோலின் மேற்பரப்பில் பரவி ஆவியாகிறது. இதனால் உடலின் வெப்பம் குறைகிறது. வெப்பம் இயல்பு நிலைக்கு வந்ததும், தோல் மூளைக்குத் தகவல் அனுப்ப, கட்டுப்பாட்டு மையம் வியர்வையை நிறுத்திவிடுமாறு ஆணையிடுகிறது. இப்போது வியர்ப்பது நின்று விடுகிறது. ஒரு லிட்டர் வியர்வை சுமார் 540 கலோரி உடல் வெப்பத்தை வெளியேற்றுகிறது. அதே நேரத்தில் உடல் மிகவும் குளிர்ந்துவிட்டால், சூடேற்றும் மையம் செயல்பட்டு, உடலின் வெப்பத்தை அதிகரிக்கச் செய்கிறது. உடலில் உருவாகும் யூரியா, அமோனியா போன்ற கழிவுப் பொருள்கள் வியர்வையில் வெளியேறுகின்றன. இதனால் ரத்தம் சுத்தமாகிறது. உடல் வியர்ப்பதால் நமக்குக் கிடைக்கும் மற்றொரு நன்மை இது.

● சே. காயத்ரி, திருக்குறுங்குடி.

? செல்போன் உபயோகிப்பதால் புற்றுநோய் உண்டாகும் என்று கூறப்படுகிறதே. உண்மையா, டாக்டர்?

! உண்மையில்லை காயத்ரி. செல்போன் உபயோகிப்பதால் புற்றுநோய் உண்டாகும் என்று இதுவரை நிரூபிக்கப்படவில்லை.

● கே. விஜயராகவன்,
திருத்துறைப்பூண்டி

? என் அம்மாவுக்கு அடிக்கடி தொண்டை அடைக்கிறது. முதுகில் வலிக்கிறது. இதற்கு என்ன காரணம் டாக்டர்?

! உன் அம்மாவுக்கு உணவுக்குழாய் அழற்சி, இரைப்பை அழற்சி அல்லது இரைப்பைப் புண் இருக்க வாய்ப்புள்ளது. குடும்ப மருத்துவரிடம் பரிசோதித்து உறுதி செய்து கொள்ளவும். அவ்வாறு இருந்தால் உணவுமுறைகளில் சில மாற்றங்களைச் செய்து கொள்ள வேண்டும். அவசரம் அவசரமாகச் சாப்பிடக் கூடாது. அதிக சூடாகவும் சாப்பிடக் கூடாது. காரம் அதிகமாக உள்ள உணவுகள் வேண்டாம். மசாலா கலந்த, எண்ணெய் மிகுந்த, கொழுப்பு நிறைந்த, புளிப்பேறிய உணவுகளைத் தவிர்க்க வேண்டும். காபி அல்லது தேநீர் அளவைக் குறைத்துக் கொள்வது பலனளிக்கும். ஒரே நேரத்தில் வயிறு நிறையச் சாப்பிடுவதைவிட, மூன்று அல்லது நான்கு மணி நேர இடைவெளிகளில் சிறிது சிறிதாகச் சாப்பிடலாம். படுக்கையின் தலைப் பகுதியை அரை அடியிலிருந்து ஒரு அடி வரை உயர்த்திக் கொள்வது நல்லது. மன உளைச்சல் ஆகாது. சரியான அளவிற்கு ஓய்வு தேவை.

● இரா. வினோத் குமார், காரைக்கால்.



? 'வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்' என்கிறார்களே... உண்மையா டாக்டர்?

! உண்மைதான். வயிறு குலுங்கச் சிரித்தால் மன அழுத்தம், தசை இறுக்கம், கவலை, கோபம், ஆத்திரம் ஆகியவை குறையும். இதனால் உயர் இரத்த அழுத்தம், சர்க்கரைநோய், இதய நோய் மற்றும் மனம் சார்ந்த நோய்கள் கட்டுப்படும். சிரிக்கும் போது நுரையீரல்கள் நன்றாக விரிவடைவதால் அதிக அளவில் ஆக்ஸிஜன் இரத்தத்தில் சேருகிறது. உடலில் இரத்த ஓட்டம் அதிகரிக்கிறது. மனம்விட்டுச் சிரிக்கும்போது 'என்டார்பின்' எனும் இயக்குநீர் அதிகமாகச் சுரக்கிறது. இது உடல் வலிகளைக் குறைக்க உதவுகிறது. சிரிக்கும் போது 'இமுனோகுளோபுலின்' எனும் புரதம் இரண்டு மடங்கு அதிகரிக்கிறது. இது உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்துகிறது. இது போன்று இன்னும் பல நன்மைகள் கிடைக்கின்றன. ஆகவே நோயின்றி வாழ வாய்விட்டுச் சிரியுங்கள்.

புதிர் இங்கே! விடை கீழே!

1. இரைப்பையில் பாலைத் தயிராக்கும் நொதி எது?

அ. பெப்சின். ஆ. ரெனின். இ. எரிப்சின்.

2. எலும்பு மூட்டுகளின் உட்புறத்தைப் பரிசோதிக்க உதவும் கருவி எது?

அ. எண்டோஸ்கோப்பி. ஆ. ஆப்தால் மாஸ்கோப்பி இ. ஆர்த்ரோஸ் கோப்பி

3. நிறக்குருடு ஏற்படக் காரணம் எது?

அ. வைட்டமின் - ஏ சத்துக்குறைவு. ஆ. மரபணுக் குறைபாடு. இ. இயக்குநீர் குறைபாடு.

4. மனிதனின் முதுகெலும்புத் தொடரில் உள்ள மொத்த எலும்புகள் எத்தனை?

அ. 31, ஆ. 13, இ. 32

5. மாமிச உணவில் எந்தச் சத்து இல்லை?

அ. வைட்டமின் பி - 12
ஆ. மாவுச்சத்து
இ. நார்ச்சத்து


விடைகள்!
1. ஆ, 2. இ, 3. ஆ,
4. இ, 5. இ

போர்க் கவசம்! பிரசாத்




டங்
டங்...
டிங்
டிங்...
சிறிது நேரத்துக்குப் பின்...
ஆ! அப்பா!
சே!
கவச உடை பாழ் ஆனது.
இப்படி ஒரு மோசமான கவச உடையைக் கொடுத்து ஏமாற்றுகிறாயா? வெளியே போ.
அந்தக் கவச உடைக்கு ஏதாவது பணம் கொடுங்கள்.
உன்னைத் தண்டிக்காமல் விட்டதே பெரிய விஷயம்.
பீர்பாலைப் பார்த்து நியாயம் கேட்கலாம்.
வியாபாரி பீர்பாலிடம் நடந்ததைக் கூறினான்.
ம்... சரி, கவலைப்படாதே! எனக்கு ஒரு யோசனை...



என்ன யோசனை?
நாளைக்கு வேறொரு கவச உடையை மாட்டிக் கொண்டு அரண்மனை பூங்காவுக்கு வா.
நீங்கள் சொல்றபடியே செய்யறேன்.
மறுநாள் பீர்பாலுடன் அக்பர் பூங்காவில் நடந்து கொண்டிருந்தார். அப்போது —
நீயா? என்ன பண்றே?
உங்கள் பயில்வான்களை இப்போது கவச உடையைப் பாழ் படுத்தச் சொல்லுங்கள்.
இதோ கூப்பிடறேன்
இரண்டு பயில்வான்களும் வியாபாரியை நோக்கி கோபத்துடன் ஓடினர்.
உயிர் மேல் பயம் இருந்தால் ஓடிப் போ.
எனக்குப் பயமில்லை. வாங்க...
ஆ!
ஹா!



e-mail: prasadiyer2000@yahoo.co.uk









கடல் குதிரை

செஸ் விளையாட்டில் குதிரை என்ற காயைப் பார்த்திருப்பீர்கள். அந்தக் காயைப் போன்ற உருவத்துடன் காணப்படும் ஒரு வகை மீன்தான் கடல் குதிரை. இதன் அறிவியல் பெயர் ஹிப்போகாம்பஸ் (Hippocampus). ஹிப்போ என்றால் குதிரை, காம்பஸ் என்றால் வளைவு. இது கிரேக்க மொழியிலிருந்து வந்த பெயர்.

கடல் குதிரை சிக்நாதிடே என்னும் குழல் மீன் (pipe fish) குடும்பத்தைச் சேர்ந்தது. இதன் கழுத்து, உடல், வால் எல்லாம் எலும்பு வளையங்களால் மூடியிருக்கும்.

உடலில் 12 வளையங்களும் வாலில் 32 முதல் 35 வளையங்களும் காணப்படும். வால் நீண்டும், குறுகிச் சென்றும்





முடியும். இந்த வாலால் கடல் குதிரை பாசி, தாவரங்கள் போன்றவற்றைக் கெட்டியாகப் பற்றிக் கொள்ளும். இது







போன்று வாலால் பற்றிக் கொள்ளக்கூடிய மீன் கடல் குதிரை மட்டுமே!

கடல் குதிரை பெரும்பாலும் சற்று செங்குத்தான நிலையிலேயே நிமிர்ந்து நீந்திக் கொண்டிருக்கும். நீந்தும்போது முதுகின் நடுவிலுள்ள துடுப்பையும், தோள் துடுப்புகளையும் விசிறி போல அசைத்துக் கொண்டு நீந்திச் செல்லும்.

முகம் குழாய் போல் நீண்டு இருக்கும். சிறிய வாய், செவுள்களும் முகத்தில் காணப்படும். முகம் உடலோடு நேர்க்கோட்டில் இல்லாமல் சற்று வெளியே நீண்டிருக்கும். இந்தத் தலைதான் பார்ப்பதற்கு குதிரை போல் தோற்றமளிக்கும்.

சாம்பல், மஞ்சள், பழுப்பு என பல்வேறு வண்ணங்களில் கடல் குதிரைகள் காணப்படுகின்றன. சிலவற்றில் வெண்புள்ளிகளும் இருக்கும். இவை கடற்பாசிகளின் மேல் இருக்கும்போது சட்டென அடையாளம் கண்டுகொள்ள இயலாது. ஐரோப்பிய கடல் குதிரைகள் இடத்திற்கு ஏற்றவாறு தங்கள் நிறங்களை மாற்றிக் கொள்கின்றன.

சாதாரணமாக கடல் குதிரைகள் 3 முதல் 6 அங்குல நீளமே வளரக் கூடியவை. அதிகபட்சமாக 7¼ அங்குல நீளமுள்ள கடல் குதிரையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

கடல் நத்தை, சிறிய நண்டு, புழு, பூச்சிகள், சின்னஞ்சிறிய பிராணிகள் போன்றவற்றை கடல் குதிரை உணவாக்கிக் கொள்ளும்.

ஆண் கடல் குதிரையின் வாலுக்குக் கீழே ஒரு பை இருக்கும். பெண் கடல் குதிரை அந்தப் பையில் முட்டைகளை இடும். ஆண் அதைப் பத்திரமாக வைத்து, பாதுகாக்கும். குஞ்சு முட்டையிலிருந்து வெளி வரும் போது 10 முதல் 12 மி.மீ அளவே இருக்கும்.

கடல் குதிரைகளில் ஐம்பதுக்கும் மேற்பட்ட இனங்கள் உண்டு.

— எஸ். சுஜாதா

சிறந்தவர் யார்?

யார்?

ஸ்வீடன் நாட்டை ஆட்சி செய்த இரண்டாம் ஆஸ்கார் மன்னர் ஒரு முறை தமது நாட்டிலுள்ள ஒரு பள்ளியைப் பார்வையிடச் சென்றார்.

ஒரு வகுப்பறையில் நுழைந்து மாணவர்களிடம், "ஸ்வீடன் வரலாற்றிலேயே மிகச் சிறந்த மன்னன் யார்?" என்று கேட்டார். ஒரு மாணவன் எழுந்து, "கஸ்டாவஸ் வாசா" என்றான். மற்றொரு மாணவன், "அடோல்பஸ்" என்றான். ஆசிரியர் முன்வரிசையிலிருந்த ஒரு மாணவனிடம், "இரண்டாம் ஆஸ்கார் என்று சொல்" என்று ரகசியமாகக் கூறினார். உடனே அவனும் எழுந்து, "இரண்டாம் ஆஸ்கார் மன்னர்தான் மிகச் சிறந்தவர்" என்றான். "எதனால் அப்படி சொல்கிறாய்?" என்று மன்னன் கேட்க "தெரியாது" என்றான் அந்த மாணவன்.

உடனே அந்த மன்னர், "நீ சொல்வதும் சரிதான். உன்னைப் போல இரண்டாம் ஆஸ்கார் மன்னனான எனக்கும் அதற்கான காரணம் தெரியாது" என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

- எம். வினோத்,
சங்கரன்கோவில்.

ஜோக்

ஜோக் சொல்பவர்கள் மீது குருச்சேவுக்குப் பயங்கரக் கோபம். "இந்த மாதிரி யாராவது ஜோக் சொன்னால், அவனைக் கண்டுபிடித்து என் கண் முன்னால் நிறுத்துங்கள்" என்று உத்தரவிட்டார்.

அதிகாரிகள் ஜோக் எழுத்தாளர் ஒருவரைப் பிடித்துக் கொண்டு போனார்கள்.

குருச்சேவின் மாளிகைக்குள் நுழைந்த அவர், அதன் ஆடம்பர அலங்காரங்களைப் பார்த்து பிரமித்துப் போனார்.

அவரைப் பார்த்து குருச்சேவ்., "என்ன சாப்பிட்டு விடுவது போல் பார்க்கிறாய்?" என்று கேட்டார்.

"பரவாயில்லை நீங்கள் வசதியாகத்தான் இருக்கிறீர்கள்."

"அதற்கென்ன, பார்த்துக் கொண்டேயிரு. இன்னும் இருபது வருடங்களில் இந்த நாட்டில் உள்ள எல்லோரும் இப்படித்தான் இருப்பார்கள்" என்றார் குருச்சேவ்.

"ஆஹா! ஒரு புது ஜோக் எனக்குக் கெடைச்சுது" என்றார் அந்த ஜோக் எழுத்தாளர்.

- ஜி.கே.எஸ். மூர்த்தி,
கோபிசெட்டிபாளையம்.

* லால்பகதூர் சாஸ்திரி



சிவப்பு தொப்பி

ஒருமுறை கான்பூரில் இந்தியாவுக்கும், காமன்வெல்த் குழுவுக்கும்



* கௌதம புத்தர்

இடையே கிரிக்கெட் பந்தயம் நடந்து கொண்டிருந்தது. லால்பகதூர் சாஸ்திரி பந்தயத்தைக் காண வந்திருந்தார். ஆட்டத்தைப் பார்க்க வந்த மாணவர்களுக்கும் காவல் துறையினருக்கும் திடீரென தகராறு மூண்டது. ரகளைப் பெரிதாகி ஆட்டம் தடைப்பட்டது. லால்பகதூர் சமாதானம் செய்ய முயன்றார். "காவல் துறையினர் வெளியேறினால்தான் அமைதியாக இருப்போம்" என்று ஆர்ப்பாட்டம் செய்தனர் மாணவர்கள். "நாளை இந்தச் சிவப்புத் தொப்பிகள் பந்தயத்துக்கு வர மாட்டார்கள்

என்று நீங்கள் உறுதி தந்தால் நாங்கள் அமைதியாக இருக்கிறோம்'' என்றார்கள் மாணவர்கள். லால்பகதூரும் 'சரி' என்றார். மறுநாள், பந்தயத்திற்கு வந்த மாணவர்கள் காவல்காரர்களைக் கண்டு கோபத்துடன் லால்பகதூரிடம் வந்தனர். சாஸ்திரி சிரித்துக் கொண்டே, ''நன்கு பாருங்கள். யாரும் சிவப்புத் தொப்பியுடன் வரவில்லை'' என்றார். காவலர்கள் காக்கித் தொப்பியில் வந்திருந்தார்கள். மாணவர்கள் அமைதியாகச் சென்று விட்டனர்.

- ஆர். ராஜலட்சுமி, கரூர்.

சம்பளம்!

ஐன்ஸ்டீன், அமெரிக்காவில் குடியேறி வேலை கேட்டு விண்ணப்பித்தார். அவரை அழைத்த ஓர் ஊதியக் குழு, ''உங்களுக்கு எவ்வளவு ஊதியம் வேண்டும்?'' என்று கேட்டது. உடனே அவர், ''அறுநூறு டாலர் வேண்டும்'' என்று கேட்டார். அதைக் கேட்டு, அனைவரும் சிரித்தனர். தன் தகுதிக்கு மேல் கேட்டு விட்டோமோ என்று நாணினார் ஐன்ஸ்டீன். அப்போது அதிகாரி ஒருவர், ''உங்கள் அறிவுக்கும் ஆற்றலுக்கும் எங்களால் ஊதியம் நிர்ணயிக்க முடியாது. வேண்டுமானால் ஐயாயிரம் டாலர் தருகிறோம்'' என்றனர்!

- ஷீபா, சுவார்ட்ஸ் மெட்ரிக் பள்ளி, இராமநாதபுரம்.

அழிப்பது சுலபம்

கௌதம புத்தர் காட்டில் சென்று கொண்டிருந்த போது ஒரு பயங்கரமான கொள்ளைக்காரன் அவரை வழிமறித்து அவரது விரல்களை வெட்டப் போவதாகச் சொன்னான். அதற்குச் சம்மதம் தெரிவித்த புத்தர் அதற்கு முன் ஒரு மரக்கிளையை வெட்டி வரச் சொன்னார். அவ்வாறே கொள்ளையனும் செய்தான். இப்போது கிளையை அதே இடத்தில் ஒட்ட வைக்கச் சொன்னார். கொள்ளையன் இது பைத்தியக்காரத்தனம் என்று வாதிட்டான். உடனே புத்தர், ''அழிப்பது எளிது. அதை உருவாக்குவதோ கடினம்'' என்றார். கொள்ளையன் வெட்கித் தலைகுனிந்தான்.

- மு. மோசஸ்பிரவின் ஞானக்குமார், சுவார்ட்ஸ் மெட்ரிக் பள்ளி இராமநாதபுரம்.




* சர்ச்சில்

எது சுகாதாரம்?

ஒரு சமயம் சர்ச்சில் அவர்களும் டாக்டர் ராதா கிருஷ்ணன் அவர்களும் சேர்ந்து விருந்து சாப்பிடச் சென்றார்கள். ராதா கிருஷ்ணன் விருந்து சாப்பிடுவதற்கு முன் கையைச் சுத்தமாகக் கழுவிக் கொண்டு வந்து சாப்பிட உட்கார்ந்தார். விருந்து பரிமாறப்பட்டது. இங்கிலாந்து பிரதமர் சர்ச்சில் ஸ்பூனை உபயோகித்து விருந்து சாப்பிட ஆரம்பித்தார். ராதா கிருஷ்ணன் ஸ்பூனை உபயோகிக்காமல், தன் கையினால் விருந்து சாப்பிடுவதைக் கவனித்த சர்ச்சில், ''என்ன இது, ஸ்பூனை யூஸ் பண்ணிச் சாப்பிடுங்க. அதுதான் சுகாதாரமானது!'' என்றார். உடனே ராதா கிருஷ்ணன், ''இல்லை சார்! ஸ்பூனை விடக் கைதான் எப்பவுமே ரொம்பச் சுகாதாரமானது. ஏனென்றால் என் கையை வேறு யாரும் உபயோகப்படுத்த முடியாது பாருங்கள்!'' என்றார். உடனே சர்ச்சில் ஆச்சரியத்தில் அதிர்ந்தார்.

- பி. ஹேமா, காஞ்சிபுரம்.



* ஐன்ஸ்டீன்

சொல்லுங்கள் விடை என்ன?



I 1. வரி வரி வண்ணக் கொம்பு, வாடாத முத்துக் கொம்பு - அது என்ன?

2. வால் நீண்ட குருவிக்கு வாயுண்டு; வயிறு இல்லை - அது என்ன?

3. தாடிக்காரன், மீசைக்காரன், கோயிலுக்குப் போனால் வெள்ளைக்காரன் - அவன் யார்?

4. பட்ட மரம் ரெண்டு, படாத மரம் நான்கு, விசிறி இரண்டு, வெண்சாமரம் ஒன்று - அது என்ன?

5. காலை, மாலை நெட்டை, மற்ற நேரம் குட்டை - அது என்ன?

6. சல சலவென்று சத்தம் போடும், பேச மட்டும் வராது - அது என்ன?

- பா. கார்த்திகா, ஏழாம் வகுப்பு,
எஸ்.ஐ.வி மெட்ரிக் பள்ளி,
சிறுமுகை.

II 1. அடி மேல் அடி வாங்கி நம்மை ரசிக்க வைக்கும் - அது என்ன?

2. உயிர் இல்லாத பறவை, ஊர் ஊராகச் செல்லும் - அது என்ன?

3. பூ உண்டு; செடி இல்லை, தலை உண்டு; உடம்பு இல்லை - அது என்ன?

4. நம்முடையது ஆனால் அதை மற்றவர்கள்தான் பயன்படுத்த முடியும் - அது என்ன?

5. நல்லவனுக்கு நல்லவன், கெட்டவனுக்கும் நல்லவன், தொட்டால் மட்டும் கெட்டவன் - அவன் யார்?

- ஜி. கார்த்திகேயசபரி, எட்டாம் வகுப்பு,
ஸ்ரீ சௌடேஸ்வரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
கோயம்புத்தூர்.

III இருட்டுக்குள் நடமாடுபவன், குருட்டுப் பட்டம் பெற்றவன் - அவன் யார்?

2. முதுகு உண்டு, முகம் இல்லை, நான்கு கால்கள் உண்டு, நடப்பானில்லை - அவன் யார்?

3. ஓடுவான், தலை கீழாக விழுவான், ஒன்றும் ஆகாது - அவன் யார்?

4. ஒரே ஒரு தாளம், எல்லாவற்றுக்கும் அடித்தளம் - அது என்ன?

5. ஒரு சாண் மனிதனுக்கு உடம்பெல்லாம் பற்கள் - அவன் யார்?

- சோ. சுவார்த்தி, ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரீ வாகீஸ்வரி வித்தியாமந்திர், பொள்ளாச்சி.

IV 1. சின்னஞ்சிறு வீட்டில் சிப்பாய்கள் பல பேர் - அவர்கள் யார்?

2. வெளியில் விரியும், வீட்டில் சுருங்கும் - அது என்ன?

3. ஓடுவான், ஒதுங்குவான், ஒற்றைக்காலில் நிற்பான் - அவன் யார்?

4. இரவுக்கு ஆயிரம் கண்கள், பகலுக்கு ஒன்று அது என்ன?

5. நோயில்லை நொடியில்லை; நாளும் மெலிகிறான் - அவன் யார்?

6. இலை கசக்கும், கனி இனிக்கும் - அது என்ன?

- எஸ். ஜெயஸ்ரீ, எட்டாம் வகுப்பு,
எஸ்.ஆர்.எஸ்.ஐ மெட்ரிகுலேஷன் பள்ளி,காரமடை.

விடைகள்

I 1. சோளம், 2. அகப்பை, 3. தேங்காய், 4. மாடு, 5. நிழல், 6. காய்ந்த இலை.

II 1. மிருதங்கம், 2. விமானம், 3. காசு, 4. பெயர், 5. மின்சாரம்.

III 1. வௌவால், 2. நாற்காலி, 3. தண்ணீர், 4. பாதாளம், 5. சீப்பு.

IV 1. தீக்குச்சிகள், 2. குடை, 3. கதவு, 4. நட்சத்திரங்கள், சூரியன், 5. நிலா, 6. வேப்பம் பழம்

ஆர்.பொன்னம்மாள்



வீட்டுவேலை செய்த கிருஷ்ணன்!

பானுதாசர் என்ற பெருமாள் பக்தரின் பேரன் ஏகநாதர். இவரது தந்தையின் பெயர் சூரியநாராயணன். இவர் இளம் வயதிலேயே யார் எதைக் கேட்டாலும் கொடுத்து விடுவார். கோயிலுக்குப் போகும் போதெல்லாம் வாசலில் இருக்கும் பிச்சைக்காரர்களுக்குக் காசு போடச் சொல்வார். அத்தனை இரக்கக் குணம் கொண்டவர். தத்தாத்ரேயரிடம் பிரம்மஞானத்தை உபதேசம் பெற்றவர்.

மகாராஷ்டிர மொழியில் ராமாயணத்தையும், பாகவதத்தையும் எழுதத் தொடங்கினார். பெற்றோர் மடிந்ததால் இவருக்குக் காலா காலத்தில் சாப்பாடு கிடைக்கவில்லை. சமையல் செய்வதை மறந்து எழுதிக் கொண்டிருப்பார். தினமும் பூஜை, வழிபாடுகள், சொற்பொழிவுகள் என்று இவருக்குத் தன் சுகம் கவனிக்க நேரமில்லாமல் போய் விட்டது. ஒருநாள் அவர் வீட்டு வாசலில் ஒரு குரல் கேட்டது. "ஐயா! இங்கே பாகவதம் எழுதிய ஏகநாதர் என்கிறது யாருங்க?." கேட்டவனுக்குப் பதினைந்து வயதிருக்கும். நெற்றியில் சந்தனத் திலகம். கட்டுக் குடுமி. முகத்திலே பவ்யம்.

"நான்தான் ஏகநாதன். என்ன வேணுமப்பா?" ஓலைச்சுவடியிலிருந்து முகத்தை நிமிர்த்தி பதில் சொன்னார்.

"என் பேர் கண்டியா கிருஷ்ணனுங்க! கடவுளுக்குத் தொண்டு பண்ணலாமென்று ஆசை. ஆனா வயிற்றுப் பசிக்கு எங்கேயாவது வேலை

செய்ய வேண்டிய கட்டாயம்'' வந்தவன் தயங்கினான்.

''கிருஷ்ணா! நாம எல்லாருமே பகவானோட தொண்டர்கள். அப்படி இருக்கும் போது யாரையும் வேலைக்காரனா நினைக்க என்னாலே முடியாது. அதோட உனக்குக் கொடுக்கற சம்பளத்தை ஒரு ஏழை பசியாற தானம் பண்ணலாமேன்னு நினைப்பு.''

கண்டியா கிருஷ்ணன் அவசரமாகக் குறுக்கிட்டான்:

''பேச்சுக்கு இடையிலே குறுக்கே பேசறதுக்கு மன்னிக்கணும். எனக்குத் தம்பிடி கூடச் சம்பளம் வேண்டாம்! பிரசாதம் கொடுத்தா போதும். உங்க ராம சரித பாராயணத்தைக் கேட்கறதே பெரிய சம்பளமாச்சே'' தடாலென்று காலில் விழுந்தான்.

அதற்கு மேல் மறுக்க முடியவில்லை ஏகநாதருக்கு! ஏகநாதர் பூஜை செய்யும் போது பூஜைக்கு வேண்டிய சந்தனம் அரைத்து, பிரசாதம் தயாரித்து, பூஜை செய்யும் போதும், சொற்பொழிவின் போதும் விசிறி... கண்டியாவின் பணிவிடைகளைக் கண்டு ஊரே அதிசயித்தது. ஏகநாதரும் கண்டியாவைத் தன் பிள்ளை போலவே நடத்தினார்.


இந்தச் சமயத்தில் ஏகநாதரின் தந்தைக்குத் திதி வந்தது. கண்டியா கிருஷ்ணன் அக்கறையாக வீடு முழுவதும் முதல் நாளே கழுவி விட்டு, தண்ணீர் இறைத்து, சமையல் செய்தான். ஏகநாதர் பூக்களுக்காக வீட்டின் பின்புறத்தில் பெரிய தோட்டம் அமைத்திருந்தார். அதைக் கவனிக்க தோட்டக்காரன் தன் குடும்பத்தோடு ஓர் ஓரத்தில் குடிசை கட்டி தங்கி இருந்தான்.

செடிகளுக்கு எருப் போட்டுக் கொண்டிருந்த தோட்டக்காரனின் மனைவி, தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்த கணவனிடம், ''வெல்லப்பாகு காய்கிற வாசனை, ஜம்முனு நெய் மணம் என்னமா வருகிறது, பார்த்தியா? வாசனையே இப்படி இருக்கே! போளியும், பாயசமும் எப்படி இருக்கும்?'' என்று மூக்கை உறிஞ்சியபடி கேட்டாள்.

தோட்டக்காரன் கோபத்தோடு, ''உனக்கு அறிவிருக்கா? இது திதி சமையல்! இதை மோப்பம் பிடிக்கிறது பாவம்! வாயை வைச்சுக்கிட்டு சும்மா இரு'' என்று கண்டித்தான்.

ஆனால் குளித்து விட்டுத் துண்டை உலர்த்த வந்த ஏகநாதர் காதில் இந்தச் சம்பாஷணை விழுந்து விட்டது. அவர் தோட்டத்துக்குப் போகாமல் கண்டியாவிடம் வந்து, ''கண்டியா! இதை நான் தோட்டக்காரன் குடும்பத்துக்கே கொடுத்து விட ஆசைப்படுகிறேன். புதிதாக வீடு மெழுகி, தண்ணீர் இறைத்து, சமையல் செய்ய உன்னால் முடியுமா? ஒரு ஜீவன் ஆசைப்பட்டதைத் திதிக்கு வைப்பது எனக்கு உகந்ததாயில்லை! நீ என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டார்.

கண்டியா சந்தோஷமாய்ச் சம்மதிக்க, எல்லாவற்றையும் தோட்டக்காரன்



* ஐ.நா. சபை 26 உறுப்பு நாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்டது.

வருத்தத்தோடு மறுத்த போதிலும் அவனுக்கே கொடுத்து விட்டார் ஏகநாதர்.

மறுபடி வீடு மெழுகி புண்யாகவசனம் செய்து சமையல் செய்தான் கிருஷ்ணன். திதியை நடத்தி வைக்கும் அந்தணர்கள் வந்தனர்.

''சற்றே பொறுக்க வேண்டும். சமையல் முடிந்த பின் ஹோமத்தை ஆரம்பிக்கலாம்'' என்று பணிவோடு கூறினார் ஏகநாதர்.

''ஏன் இத்தனை தாமதம்?'' என்று ஒருவர் கேட்க, பொய் சொல்லத் தெரியாத ஏகநாதர் நடந்ததைக் கூறினார். அவ்வளவுதான்! வந்தவர்கள் கொதித்தனர்.

''திதி முடியும் வரை மாட்டுக்கே கழுநீர் காட்டக் கூடாது. பிச்சையிடுவதே பாவம் என்றெல்லாம் சாஸ்திரம் சொல்கிறது! இப்படி சமைத்துக் கொடுத்திருக்கும் வீட்டில் திதி நடத்திக் கொடுக்க மாட்டோம்'' என்று சுத்தியபடி தெருத் திண்ணையிலேயே உட்கார்ந்திருந்தனர்.

புராணங்களிலிருந்து ஏகப்பட்ட உதாரணங்களை எடுத்துரைத்து ஏகநாதர் சமாதானம் சொன்னபோதிலும் அவர்கள் அதை ஏற்பதாயில்லை!



ஏகநாதரின் தவிப்பைக் கண்ட கிருஷ்ணன், ''ஐயா! கவலையை விடுத்து மகாவிஷ்ணுவைத் தியானியுங்கள். உங்களுக்கோ மந்திரங்கள் மனப்பாடமாய்த் தெரியும். நானும், எனக்கு உதவி செய்யும் சிற்றாளும் அதிதியாகச் சாப்பிடுகிறோம். பகவான் வழி காட்டுவார்'' என்று யோசனை சொன்னான்.

ஏகநாதரும் உருக்கத்தோடு, ''இறைவா! நான் செய்ததை நீ ஏற்பாயானால் நீதான் இன்றைய காரியத்தை என் மனம் திருப்தி அடையும்படி நடத்தித் தர வேண்டும்'' என்று பிரார்த்தித்தார்.


முற்றத்தில் பறவையின் சிறகடிக்கும் சப்தம் கேட்டு கண் திறந்தார். கருட வாகனத்திலிருந்து ஸ்ரீஹரி சங்கு சக்கரத்தோடு இறங்கிக் கொண்டிருந்தார். அருகிலே சூலாயுதத்தோடு சிவபெருமான். அவரோடு இருந்த வடிவம் கறுப்பாக நிழல் போல் இருந்தாலும் தந்தை என்று அடையாளம் கண்டுகொண்டார்.

ஏகநாதரின் சந்தோஷம் சொல்லி முடியாது. மகிழ்ச்சியில் என்ன செய்வதென்றே தெரியாமல் பரபரத்தார். அனைவரையும் வரவேற்று, பாதபூஜை செய்து, மணையில் உட்கார வைத்தார். ஹோமம் தொடங்கியது.

ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்த சாஸ்திரிகள் உள்ளே நடந்த அதிசயத்தைக் கண்டு நம்ப

தாவரங்கள் பூச்சி உண்பது ஏன்?

சதுப்பு நிலக்காடுகளில் காணப்படும் நெப்பன்திஸ் பிட்சர், சன் டியு போன்ற பூச்சி உண்ணும் தாவரங்கள் மற்ற தாவரங்கள் போல் ஒளிச் சேர்க்கை செய்து உணவு தயாரிக்கக் கூடியவை. ஆனால் அவ்வாறு தயாரிக்கும் உணவு அவற்றிற்குப் போதுமானதாக இருக்காது. எனவே



இவை பூச்சிகளையும் உண்டு உயிர் வாழ்கின்றன. ஒவ்வொரு பூச்சி உண்ணும் தாவரமும் வெவ்வேறு உடலமைப்பு கொண்டு பூச்சியை உண்ணுகிறது.

- மு. மோசஸ் பிரவின் ஞானக்குமார்

முடியாமல் திகைத்தனர்.

திதி முடிந்து அதிதிகள் மறைந்ததும் அவர்கள் ஏகநாதரிடம், "என்ன இருந்தாலும் இதற்கு கங்கை நீரில் ஒரு பிராயச் சித்தம் செய்து விடு" என்று கூற, ஏகநாதர் மகிழ்ச்சியோடு சம்மதித்து கங்கைக்கு வந்தார்.

ஊரே கூடி இருந்தது. அப்போது ஒரு கிழவர் உடலெல்லாம் கொப்பளங்களுடன் வந்து, "இங்கே ஏகநாதர் வீடு எது என்று யாராவது சொல்லுங்களேன்" என்று கெஞ்சினார். ஒருவர் ஏகநாதரைக் காட்டி, "இவர்தான் ஏகநாதர். எதற்காகத் தேடுகிறீர்கள்?" என்று விசாரித்தார்.

"பைடனிபுரத்திலே என் பக்தன் ஏகநாதன் திதி நாளில் சமைத்ததை அப்படியே தூக்கி ஒரு ஏழைக் குடும்பத்திற்குக் கொடுத்து விட்டான். அதிலே ஒருவர் சாப்பிட்ட புண்ணிய பலனைத் தானமாக வேண்டிக் கேள். அது உன் உடல் புண்களைக் குணமாக்கும் என்று பகவான் சொப்பனத்தில் வந்து சொன்னார். நானும் எத்தனையோ வைத்தியம் பார்த்து நொந்து போய் விட்டேன். போகாத கோவிலில்லை! குளிக்காத தீர்த்தமில்லை. அதுதான் ஓடி வந்தேன்" என்று விளக்கமளித்தார்.

இதைக் கேட்ட ஏகநாதர், "பெரியவரே! புண்ணியம் கருதி நான் அன்னம் தரவில்லை! அந்தப் புண்ணியத்தால் உமது வியாதி நீங்குமானால், அதற்காக நான் மகிழ்ச்சி அடைவேன்" என்று கூறி கங்கா ஜலத்தை அவர் கையில் விட, முதியவர் உடலிலிருந்த புண்கள் மறைந்தன. சாஸ்திரிகள் இதைக் கண்டு தலைகுனிந்தனர். ஊரே ஏகநாதரைப் புகழ்ந்தது.

ஒரு பக்தர் இறைவனைத் தரிசிக்க உபவாசம் இருந்து கடும் தவம் செய்ய, ருக்மிணிப் பிராட்டி அவர் முன் தோன்றி, "அன்பா! பகவான் பைடனிபுரத்தில் ஏகநாதர் வீட்டில் கண்டியா கிருஷ்ணன் என்ற பெயரில் பன்னிரண்டு வருஷங்களாகத் துணி துவைத்து, அவருக்குக் கால் பிடித்து சேவை செய்து கொண்டிருக்கிறார். அங்கு போய் தரிசனம் செய்து கொள்" என்று கூறினார்.

பக்தர் புறப்பட்டு பைடனிபுரம் சென்றார். ஏகநாதர் வீட்டை விசாரித்து உள்ளே நுழைந்தார். ஏகநாதர் காலில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார்.

ஏகநாதர் திகைத்து, "நீங்கள் யார்?" என விசாரிக்க, "உலகமே திருமாலைக் காணத் துடிக்கும் போது உம்மிடம் அவர் தேடி வந்து பணி செய்ய என்ன புண்ணியம் செய்தீரோ?" என நாக்குழற பதிலளித்தார்.

"ஸ்வாமி! என்னிடம் பகவான் பணி செய்கிறாரா? கண்டியா, கண்டியா... இங்கே வா" என உரக்க அழைத்தார்.

"இனிமேல் அவனைக் காண முடியாது! உண்மை தெரிந்த பிறகு ஓரிடத்தில் தங்குவானா அவன்?" என்று உருகினார் பக்தர். கண்டியாவை எங்கும் காணாமல் அழுது புலம்பினார் ஏகநாதர்.

இன்றும் பண்டரீபுரத்தில் ஏகநாதர் பாடல்களைப் பாடிய பின்னரே கற்பூர ஆரத்தி காட்டுகின்றனர். அவரது பாகவதத்திற்கு 'ஹரிபாட்' என்று பெயர்.

குறுக்கெழுத்துப் புதிர்




இடமிருந்து வலம்

1. குஜராத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன் இது ஏற்பட்டது (5)
6. மென்மை (3)
10. பழம் (2)
11. ———— அனைவரும் இந்தியர்கள் (2)
12. தேன் விரும்பும் பிராணி (3)

வலமிருந்து இடம்

1. இரவில் இரை தேடும் பறவை; விவசாயிகளின் தோழன் (3)
4. காகிதம் (2)
5. மீன் பிடிக்க இது உதவும் (2)
9. பாலைவனத் தாவரம் (3)
14. இந்தியாவின் ——— டெல்லி (5)



மேலிருந்து கீழ்

1. வண்ண வண்ண இவற்றைக் கண்டால் எல்லோருக்கும் மகிழ்ச்சி உண்டாகும் (4)
2. கோயில் என்பதை இப்படியும் அழைக்கலாம் (4)
8. மார்கழி மாதம் அதிகாலையில் இது அதிகம் இருக்கும் (2)
9. பிம்பத்தைப் பிரதிபலிக்கும் (4)
10. கவிச்சக்கரவர்த்தி ——— (4)

கீழிருந்து மேல்

3. நம் ஜனாதிபதி (3)
5. வளையல், சக்கரம் போன்றவை இந்த வடிவமானவை (4)
6. சின்னஞ்சிறிய பழம்; மரத்தில் முட்கள் இருக்கும்; இலை வட்ட வடிவில் சிறிதாகக் காணப்படும் (4)
7. ஆடல், பாடல் என்பது ஒரு ——— (2)
12. குளிருக்கு இதமானது ——— (4)
13. வெட்ட, வெட்ட வளரும்; வெட்டிய துண்டு பிறைபோல் காட்சி தரும் (3)
14. ஆண் யானைக்கு இது உண்டு; பெண் யானைக்கு இது இல்லை (4)

— வி. ரேவதி, பன்னிரண்டாம் வகுப்பு, சுவாமி தயானந்தா மேல் நிலைப் பள்ளி, மஞ்சக்குடி, திருவாரூர் மாவட்டம்.

விடை 64 ஆம் பக்கம்



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

ஓவியப் போட்டி, பொது அறிவுப் போட்டி, அனுபவங்கள், துணுக்குகள், படக்கதைகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசளியுங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

என். கோதண்டராமன்



செண்பகா தேவியும் ஒற்றைக் கண் மந்திரவாதியும்

காந்தார தேசத்து மன்னன் கந்தர்வசேனனின் மகள் செண்பகா தேவி. செண்பகாதேவி வில்வித்தை, குதிரை, யானை ஏற்றம் மற்றும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினாள்.

ஒரு நாள் தன் தந்தை கந்தர்வசேனனிடமும் தாய் திருலோக நாச்சியாரிடமும் தான் காட்டுக்கு வேட்டையாடப் போக ஆசைப் படுவதாகக் கூறினாள்.

திருலோக நாச்சியார் "மகளே, நீ இந்த நாட்டின் இளவரசி. நீ எங்கும் தனியாக வெளியில் செல்லக் கூடாது" என்றாள்.

செண்பகாதேவி, "அப்பா! அம்மா சொல்வதைப் பாருங்கள், நான் வில் வித்தை கற்று என்ன பயன்? எனது தோழிகளும் போர் வீரர்களும் துணை வரத்தானே செல்கிறேன். அப்பா நீங்கள் என்னை ஒரே ஒரு முறை அனுமதியுங்கள்" என்று கண்ணீர் சிந்தினாள்.

மகளின் கண்ணீரைக் கண்ட மன்னன், "மகளே, உனக்கு நான் என்ன சொல்வதென்று புரியவில்லை. இந்த ஒருமுறை மட்டும் வேட்டைக்குச் சென்று வா. ஆனால் இதுவே கடைசியாகவும் இருக்க வேண்டும்" என்றான்.

நல்ல நாளில் மேள தாளங்கள் முழங்க வேட்டைக்குக் காடு நோக்கிக் கிளம்பினாள்.

அன்றோ மிருகங்களே அவள் கண்ணில் படவில்லை. மூலைக் கொருவராகத் தோழிகளும் போர் வீரர்களும் தேட, திடீரென சிறுத்தைப் புலி ஒன்று புதரிலிருந்து வெளிப்பட்டு ஓட, செண்பகா அதைத் துரத்தியபடியே சென்றாள். காட்டினுள் வெகு தூரம் வந்து விட்டாள். சிறுத்தைப் புலி போன வழி தெரியவில்லை.

செண்பகா பின்னால் திரும்பிப் பார்த்தாள். தோழிகளோ, போர் வீரர்களோ யாரும் காணவில்லை. நாக்கு வறட்சியால் துவண்டது.

தண்ணீருக்காக அலைந்தாள். மயங்கி கீழே விழுந்தாள்.

வனதேவதை ஓடி வந்து செண்பகா தேவியைத் தூக்கி மடியில் படுக்க வைத்துக் கொண்டது.

செண்பகா தேவிக்கு மயக்கம் தெளிந்தது. தான் வன தேவதையின் மடியில் படுத்திருப்பதை உணர்ந்தாள். தன்னைக் காப்பாற்றியதற்கு வனதேவதைக்கு நன்றி கூறினாள்.

வனதேவதை செண்பகா தேவியைப் பார்த்து "செண்பகா, உன்னை உன் அரண்மனையில் நான் சேர்த்து விடட்டுமா?" என்றது.

"வனதேவதையே , நான் என் நாட்டிற்குச் சென்று விட்டால் மீண்டும் வெளியே வர முடியாது. எனவே நான் சில காலம் வெளியில் தங்கி நாடு நகரங்களைச் சுற்றிப் பார்த்து விட்டு என் நாடு திரும்ப விரும்புகிறேன். இதற்கு உனது உதவி தேவை" என்றாள் செண்பகா.

"செண்பகா, என் உதவி உனக்கு எப்போதும் உண்டு. நான் இந்தக் காட்டின் சிறிய வன தேவதைதான். என் தகுதிக்கு ஏற்ப நான் உனக்கு உதவுகிறேன்.

"நீ காணாமல் போனதை வீரர்களும் உன் தோழிகளும் உன் தந்தையிடம் கூறி விட்டார்கள். அவர் நோய் வாய்ப்பட்டு படுத்த படுக்கையாகி விட்டார். எனவே நீ ரொம்ப நாள் வெளியில் சுற்ற முடியாது.

"உனக்கு நான் மூன்று பௌர்ணமி வரை வெளியில் தங்க அனுமதிக்கிறேன். நீ எங்கிருந்தாலும் மூன்றாவது பௌர்ணமியன்று அரண்மனைக்குச் சென்று விட வேண்டும். அதற்கு நீ கட்டுப்பட்டால் நான் உனக்கு உதவி செய்கிறேன்" என்றது வனதேவதை.

"அப்படியே ஆகட்டும்" என சத்தியம் செய்தாள் செண்பகா தேவி.


"செண்பகா, உனக்கு நான் மூன்று வரம் தருகிறேன். ஒன்று: நீ நினைத்த உரு மாறலாம். இரண்டு: அந்த உருவை நீ மீண்டும் இக்கட்டான நேரத்தில் மட்டுமே மாற்ற வேண்டும். மூன்று: நீ பெண் உருவாக மட்டுமே மாற வேண்டும். நீ எப்படிப்பட்ட பெண்ணாக வேண்டுமானாலும் உருமாறலாம்" என வரம் கொடுத்தது வனதேவதை.

செண்பகாதேவி தங்க நிறக் கிளியாக உருமாறிப் பறந்து வேறு நாட்டின் தலைநகரை அடைந்தாள்.

அங்குள்ள வீடு ஒன்றின் ஓட்டின் மீது அமர்ந்தாள். தண்ணீர் தாகம் எடுக்க வீட்டினுள்ளே நுழைந்தாள்.

அந்த வீட்டில் வசிக்கும் கணவனும் - மனைவியும் மிகவும் வருத்தத்துடன் பேசிக் கொண்டிருந்தனர். சாப்பாட்டிற்கே வழியில்லாத சூழ்நிலையில் இருந்தனர்.





செயற்கை யானைத் தந்தம்!


பை டெலிபாஸ் மாக்கரோ கார்பா என்பது தென் அமெரிக்காவில் உள்ள ஒரு வகை பனை மரம். இதில் ஒரு கடினமான 'விதை' உண்டாகிறது. இது பார்ப்பதற்கு அசல் யானைத் தந்தத்தைப் போல் இருப்பதால் தந்தத்திற்குப் பதில் இதைப் பயன்படுத்துகிறார்கள்.

\- ஆர். ஆர். பூபதி

அவர்கள் பேச்சைக் கேட்ட தங்க நிறக் கிளியான செண்பகாதேவி, அவர்கள் எதிரில் போய் நின்றாள்.

"ஐயாவுக்கும் அம்மாவுக்கும் வணக்கம்" என்றாள். கிளி பேசுவதைக் கண்டு கணவன், மனைவி இருவரும் ஆச்சரியப் பட்டனர்.

"என்ன நான் பேசுவதைக் கண்டு ஆச்சரியமாக உள்ளதா? நான் நடனம் கூட ஆடுவேன். நீங்கள் இப்பொழுது என்னை இந்த நகரின் வியாபாரச் சந்தைக்கு அழைத்துச் செல்லுங்கள். நான் பாட்டுப் பாடி நடனம் ஆடுகிறேன். என்னை விலைக்குக் கேட்பார்கள். ஆயிரம் தங்க வராகன் விலை சொல்லுங்கள். அரசர்கள் என்னை வாங்கிக் கொள்வார்கள். உங்கள் கஷ்டமும் தீரும்" என்றாள் செண்பகாதேவி.




அதன்படியே அவர்கள் தங்க நிறக் கிளியைச் சந்தைக்கு விற்பனைக்குக் கொண்டு செல்ல, கிளியின் பாட்டிலும் ஆட்டத்திலும் மனதைப் பறிகொடுத்த அரசர் ஒருவர் ஆயிரம் தங்க வராகன் கொடுத்து வாங்கிக் கொண்டார்.

கிளி பாடுவதும் ஆடுவதும் அந்த நகரம் முழுவதும் பரவி விட்டது. அன்று இரவு அரசன் தங்கக் கிளியுடன் சத்திரத்தில் தங்கியிருக்கும்போது, காந்தார தேசத்து அமைச்சரின் மகன் இந்திரஜித் அந்த நகருக்கு வந்து சேர்ந்தான்.

"நகரில் ஏதாவது விசேஷம் உண்டா?" என்று மக்களை விசாரித்தான். கிளி பாடியதையும் நடனம் ஆடியதையும் அனைவரும் புகழ்ந்து கூற கிளி இருக்குமிடத்தைக் கேட்டறிந்து சத்திரத்தை நோக்கிச் சென்றான்.

தங்க கிளியாய் இருந்த செண்பகாதேவி, இந்திரஜித்தைப் பார்த்ததுமே புரிந்து கொண்டாள் 'நம்மை அழிக்க வந்திருக்கிறான்' என்று.

இந்திரஜித்தும் கிளியைப் பார்த்ததும் ஒருவேளை இது



ஓட்டப் பந்தயம்!

1905-ஆம் ஆண்டு பாரீஸ் நகரில் ஒரு வித்தியாசமான ஓட்டப் பந்தயம் நடந்தது. பாரீஸ் நகரின் புகழ் பெற்ற ஈஃபில் டவரில் ஏறி, இறங்கி யார் குறைந்த நேரத்தில் ஓடி வருகிறார்கள் என்பதே போட்டி. 300 பேர் கலந்து கொண்ட இந்தப் போட்டியில் பேரோஸ்டியர் என்பவர் ஈபில் டவரின் 729 படிகளை 3 நிமிடம் மற்றும் 3 வினாடிகளில் ஏறி, இறங்கி முதல் பரிசைத் தட்டிச் சென்றார்.



- ஆர்.ஆர். பூபதி

செண்பகா தேவியாக இருக்குமோ என எண்ணி மந்திரத்தை மனதில் நினைக்க, அவள் செண்பகா தேவிதான் எனப் புரிந்து கொண்டான். 'இவளை எப்படி கொல்வது?' என இந்திரஜித் நினைக்க, 'இவனிடம் இருந்து எப்படி தப்பிப்பது?' என செண்பகாதேவி நினைத்தாள்.

காட்டுப் பூனையாக மாற வேண்டும் என்றான் இந்திரஜித். அடுத்த நிமிடம் காட்டுப் பூனையாக மாறிவிட்டான்.

செண்பகாதேவி இந்த இக்கட்டான சூழ்நிலையில் என்ன செய்வது என யோசித்து இரண்டாவது வரத்தைப் பயன்படுத்த முடிவு செய்தாள்.

அவள் சிறுத்தைப் புலியாக உருமாற, சிறுத்தைப் புலியைக் கண்ட காட்டுப் பூனை பயந்து அலறி வெளியில் ஓடியது.

சத்திரத்தை விட்டு வெளியில் வந்த செண்பகா தேவி, 'இரண்டு வரங்களைப் பயன்படுத்தி விட்டேன். இனி நான் மூன்றாவதாக, பெண்ணாக உருமாற வேண்டியதுதான். நான் சிறுத்தைப் புலியாக எங்கும் செல்ல முடியாது' என நினைத்தவள், ஒரு தேவதையாக உரு மாற விருப்பம் கொள்ள, அடுத்த நிமிடம் இறக்கை முளைத்த தேவதையாக வானில் பறந்தாள். இரண்டு பௌர்ணமிகள் கடந்து விட்டன.

வானில் பறந்து சென்ற செண்பகா தேவியை ஒற்றைக் கண் மந்திரவாதி பார்த்து விட்டான். அவளைப் பின் தொடர்ந்து அவனும் பறந்தான்.

செண்பகாதேவியும் ஒற்றைக் கண் மந்திரவாதியும் வானில் பறப்பதைக் கண்ட இந்திரஜித் பறக்கும் குதிரையிலேறி இருவரையும் பின் தொடர்ந்தான்.

ஒற்றைக் கண் மந்திரவாதி செண்பகா தேவியைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஒரு மலைக் குகையினுள் நுழைந்தான்.

குகையினுள்ளே பெரிய அரண்மனை இருந்தது. ஓர் இடத்தில் பெரிய கண்ணாடிக் குடுவையினுள் நூற்றுக் கணக்கான உயிர்கள் குதித்துக் கொண்டிருந்தன.

"பார்த்தாயா இந்த உயிர்களை. வரும் பௌர்ணமியன்று அக்னி தேவனுக்கு அர்ப்பணம் செய்வதன் மூலம் எனக்குச் சகல சித்திகளும் கை கூடிவிடும். இந்த உலகையே நான் ஆட்சி செய்வேன். அப்போது நீதான் என் பட்ட மகிஷி" எனக் கூறிச் சிரித்தான், ஒற்றைக் கண் மந்திரவாதி.

செண்பகாவைத் தேடிக் கொண்டு இந்திரஜித் வந்தான். மந்திரவாதியின் முன் போய் நின்றான். இருவரும் கட்டிப் புரண்டு சண்டையிட ஆரம்பித்தனர்.

செண்பகா தேவி பார்த்தாள். இதுதான் நாம் தப்பிக்க சரியான சமயம் என நினைத்தவள் மெதுவாக கண்ணாடிக் குடுவையின் அருகில் சென்று அதன் மூடியை வேகமாகத் திறந்து விட்டாள். உயிர்கள் அனைத்தும் அவளை வாழ்த்தி மகிழ்ச்சியுடன் வெளியேறின. செண்பகாதேவி வேகமாக வெளியில் ஓடி வந்து இந்திரஜித்தின் பறக்கும்குதிரை மீது தாவி ஏறி, வனதேவதையை மனதில் நினைக்க, காந்தார நாட்டை நோக்கி குதிரை பறந்தது.

மூன்றாவது பௌர்ணமி வானில் ஒளி வீச ஆரம்பித்தது.

மந்திரவாதியும் இந்திரஜித்தும் ஒருவரை ஒருவர் வெட்டிக் கொண்டு வீழ்ந்தனர்.

I. எங்கள் வீட்டிலுள்ள தொட்டி 3 மணி நேரத்தில் நிறைந்து விடும். அதிலுள்ள நீர் 6 மணி நேரத்தில் வெளியேறி விடும். ஒரே நேரத்தில் இரண்டு குழாய்களும் திறந்திருக்கும் போது தண்ணீர் நிறைய எத்தனை மணி நேரம் ஆகும்?

- தமீம் மினாஸ்
ஏழாம் வகுப்பு,
சுவார்ட்ஸ் மெட்ரிக் பள்ளி,
இராமநாதபுரம்.



II. ஓர் எண்ணை முதலில் அதே எண்ணால் பெருக்கி, வரும் தொகையை அதே எண்ணுடன் கூட்டி, பிறகு அதே எண்ணைக் கழித்து, அதே எண்ணுடன் வகுத்தால் அதே எண் வரும். அந்த எண் எது?

— என். ஜரினா பானு,
திருபட்டினம்.

III. எங்கள் வகுப்பு மாணவர்கள் சுதந்திர தின வாழ்த்து பரிமாறிக் கொண்டோம். தபால்காரர் 930 கடிதங்கள் கொண்டு வந்தார். அப்படியானால் எங்கள் வகுப்பில் எத்தனை மாணவர்கள்?

- நெ. இராமன், சென்னை.

IV. சைக்கிள் பந்தயத்தில் கலந்து கொள்ள விரும்பிய ரகு தினமும் அதற்குப் பயிற்சி செய்தான். நாள்தோறும் தன் சைக்கிளை ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு ஓட்டி, அந்த நேரத்தில் தான் கடந்த தூர அளவைக் குறித்துக் கொண்டான். ஒரே நேரத்தில் நாளுக்கு நாள் ஒரு மைல் தூரம் அதிகமாகக் கடப்பதாகக் கணக்கிட்டான். அவன் ஒன்பது நாட்களில் 117 மைல்கள் ஓட்டியிருக்கிறான். அப்படியென்றால், அவன் ஒவ்வொரு நாளும் சைக்கிளில் சென்ற தூரம் எவ்வளவு?

— குட்டி பிரசன்னா,
காந்திகிராமம்

V. நான் இலங்கைக்குக் கப்பலில் சென்றுகொண்டிருந்தேன். இலங்கை நெருங்க கொஞ்ச தூரம் இருக்கும்போது பசிபிக் கடலில் பெரும் புயல் வீசி கப்பல்கள் உடைந்து போயின. ஆனால் எங்களது கப்பல் மட்டும் பத்திரமாக இலங்கையை அடைந்தது, எப்படி?

— மு. மோசஸ்
பிரவின் ஞானக்குமார்,
ஒன்பதாம் வகுப்பு,
சுவார்ட்ஸ் மெட்ரிக்
பள்ளி, இராமநாதபுரம்.

VI. எங்கள் பள்ளி மாணவ, மாணவியர் முதுமலை காட்டிற்கு ஆராய்ச்சி செய்யச் சென்றோம். அங்கு நாங்கள் கண்ட வித விதமான சிங்கங்களைப் பற்றி கட்டுரை எழுதினோம். நாங்கள் சொல்லியதில் ஒரு தவறு உள்ளது; அது என்ன?

- விமல்,
சுவார்ட்ஸ்
மெட்ரிக்
பள்ளி, இராமநாதபுரம்.

VII. ஆறு எழுத்துகளுள்ள பெயரைக் கொண்ட ஓர் ஊர். ஆறு பாயும் அழகான ஊர். எழுத்துகளை மூன்றாகப் பிரித்தாலும் பொருள் தரும். முதல் பிரிவு மரியாதையைக் குறிக்கும். இரண்டாவது பிரிவு தானியத்தைக் குறிக்கும். கடைசிப் பிரிவு பாதுகாப்பளிக்கும். அது எந்த ஊர்?

— நெ. இராமன்,
சென்னை

VIII. கீழே கொடுக்கப்பட்டிருக்கும்

ஐந்து கேள்விகளுக்கும் பதில்கள் ஏறு வரிசை முறையில் 2, 3, 4, 5, 6 என்று எழுத்துகளைக் கொண்டிருக்கும். எங்கே விடைகளைக் காணுங்கள் பார்க்கலாம்!

1. விண்வெளிக்குச் சென்ற முதல் விலங்கு.

2. நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு.

3. மயிலாசனத்தை இந்தியாவிலிருந்து எடுத்துச் சென்றவர்.

4. இந்தியாவிலேயே ஆங்கில மொழியை ஆட்சி மொழியாகக் கொண்ட மாநிலம்.

5. நமது திரைப்படக் கவிஞர்களில் பகுத்தறிவுக் கவிராயர் என மதிக்கப் படுபவர்.

— சிவ. மணவழகி,
மயிலாடுதுறை

புதிர் பக்க விடைகள்!

I. 6 மணி நேரம்

II. எல்லா எண்களும் அப்படித்தான்.

III. 31 மாணவர்கள்

IV முதல் நாள் முதல் 9 நாட்களும் அவன் சைக்கிள் ஓட்டிய தூரங்கள் முறையே 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17 மைல்களாகும்.

V : புயல் பசிபிக் கடலில் தானே வீசியது. நான் பயணம் செய்தது வங்காள விரிகுடா கடலில்தானே!

VI இந்தியாவில் கிர் காடுகளைத் தவிர வேறு எங்கும் சிங்கங்கள் இல்லை.

VII திருநெல்வேலி

VIII 1. நாய்

2. நார்வே

3. நாதிர்ஷா

4. நாகாலாந்து

5. நாராயணகவி



குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 பூ	க	ம்	ப	ம்	■	தை	ந்	2 ஆ
க்	■	லா	■	ட	■	ந்	■	ல
க்	■	3 க	■	ட்	■	ல	■	ய
ள்	4 தா	■	லை	5 வ	■	6 இ	த	ம்
■	■	■	7 க	■	8 ப	■	■	■
ளி	ள்	9 க	■	10 க	ளி	■	11 நா	ம்
ப	■	ண்	■	ம்	■	ம்	■	த
ம்	■	ணா	■	ப	■	க	■	ந்
12 க	ர	டி	■	ர்	க	13 ந	லை	14 த



CENTRESPREAD POSTER
GOKULAM
The magazine for children
September 2003
MAKE YOUR OWN GANESHA!
COVER STORY
TRENDY FASHIONS!
STAR RENDEZVOUS
P.T.USHA ANSWERS YOUR QUESTIONS
Get your copy today for Rs.6/- only! For subscriptions mail to :
GOKULAM
Kalki Buildings, 47-NP, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, CHENNAI - 600 097.
E-mail: subscription@kalkiweekly.com

அந்த வாத்து பிறக்கும்போதே அரு வருப்பாகப் பிறந்தது. "நம்முடைய இனத்தில் இத்தனை அசிங்கமாக யாரும் அவதரித்ததில்லையே" என்று எரிச்சலுடன் பேசிக் கொண்டன சகோதர வாத்துகள். பாவம்! அசிங்கமான வாத்துக் குஞ்சு அதற்கென்ன செய்யும்? மற்ற வாத்துகளின் கிண்டலையும், கேலியையும் தாங்க முடியவில்லை. தனிமையில் சென்று கண்ணீர் சிந்தும். என்ன ஆச்சரியம்! மாதங்கள் செல்லச் செல்ல அதன் உடலில் மினு மினுப்பு உண்டானது. நிறம் வெண் பனிங்கு போலானது. கண்கள் பளிச்சிட்டன. குட்டி வாத்தின் தோற்றம் மாறிக் கொண்டு வருவது குறித்து மற்ற வாத்துகளுக்கு ஒரே ஆச்சர்யம், பொறாமை! "இதெப்படி சாத்தியம்! ஏதாவது வானத்து தேவதை இதன் உடலில் புகுந்து கொண்டதோ!" என்று படபடப்புடன் பேசிக் கொண்டன. காலப் போக்கில் அந்த அருவருப்பான வாத்துக் குஞ்சு, அழகான அன்னப் பறவையாக மாறிவிட்டது.



• ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்ஸென்

கதைச் சக்கரவர்த்தி!

எங்கோ படித்த கதை போல இருக்கிறதா! Ugly duckling என்ற கதைதான் இது என்பது புரிந்திருக்குமே! இந்தக் கதையை எழுதியவர் ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்ஸென். டென்மார்க் நாட்டைச் சேர்ந்த இந்த எழுத்தாளரும், இளம் வயதில் உள் சொருகிய கண்கள், மேடான நெற்றி, ஒடுங்கிய கன்னம் என்று அசிங்கமாகத்தான் இருந்தார். 70 வயதில் அவர் காலமான போது, டென்மார்க் அரசர் நாட்டிலேயே மிக உயர்ந்த (நமது பாரத ரத்னாவைப் போன்றது) விருதைக் கொடுத்து கௌரவித்தார். காரணம், தனது 'தேவதைக் கதைகள்' (fairy tales) மூலம் அதற்குள் உலகம் முழுவதும் உள்ள லட்சக் கணக்கான குழந்தைகளை மட்டுமல்ல, பெரியவர்களையும் ரசிகர்களாகப் பெற்று விட்டிருந்தார் ஆண்டர்ஸென்.


நமது புராணங்களில் மாய, மந்திர, வீர சாகஸக் கதைகள் நிறையவே உண்டு. ஆனால் பெரும்பாலான கதைகள், இலக்கிய வடிவம் பெறாமல் செவி வழிக் கதைகளாகவே இருந்து வந்திருக்கின்றன. ஆண்டர்ஸென் கதைகள் வீர சாகஸ, வியக்க வைக்கும் சம்பவங்கள் கொண்டவை மட்டுமல்ல; அவை கவித்துவமான, ஆனால் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் எழுதப்பட்ட இலக்கியங்கள். அவரது கதைகளில் மரங்களும், பொம்மைகளும், ஏன் சமையலறைப் பாத்திரங்களும் கூடப் பேசும், பாடும், கண்ணீர் விடும். அவற்றிற்கு மனிதர்களைப் போன்றே அங்கீகாரம் கொடுத்தவர் ஆண்டர்ஸென்.

ஆண்டர்ஸெனின் தேவதைக் கதைகள் 'உலகம் முழுவதும் அறுபது மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன.

ஆண்டர்ஸென் பிறந்தது 1805ம் ஆண்டு டென்மார்க் நாட்டிலுள்ள ஆடன்ஸ் நகரில். அப்பா செருப்புத் தைக்கும் தொழிலாளி. அம்மா சலவைத் தொழில் செய்பவர். இருவரும் காலையிலேயே தொழில் நிமித்தமாக வெளியே சென்று விடுவார்கள். அந்தக் குடும்பம் ஒரே அறையில்தான் குடியிருந்தது. உள்ளே ஆண்டர்ஸென்னையும் கூடவே ஏராளமான பொம்மைகளையும் வைத்துப் பூட்டி விட்டுச் சென்று விடுவார்கள். பகல் முழுவதும் அந்தப் பொம்மைகள் அவருக்குத் துணை. அவற்றுடன் ஆண்டர்ஸென் பேசுவார், சண்டை போடுவார், கைகோத்துக் கொள்வார் அவருடைய உள்ளுணர்வோடு கலந்து விட்டன அந்தப் பொம்மைகள். ஆறு வயதில் பள்ளியில் சேர்த்தனர் பெற்றோர்கள். அப்போதுதான் வெளியுலகத்தை முழுமையாகக் கண்டார் ஆண்டர்ஸென். நீல வானமும், பச்சைச் செடி கொடிகளும், பாடும் குயில்களும் அவருக்குப் புது உற்சாகத்தைக் கொடுத்தன.

பையனுக்குப் படிப்பில் கொஞ்சம் கூட ஆர்வம் இல்லை என்று புரிந்து கொண்டனர் பெற்றோர்கள். 'பார்க்க வேறு அசிங்கமாக இருக்கிறான்; படிப்புமில்லை... என்ன செய்யப் போகிறானோ?' என்ற கவலை பெற்றோரை வாட்டியது. இதற்குள் நண்பர்கள் வட்டாரம் ''டேய்... உன் குரல் ஜோரா இருக்கே... பாடகனாகலாம்'' என்று ஏற்றி விடவே, 14 வயதில் தலைநகர் கோபன் ஹெகனுக்கு வந்துவிட்டார். ஆனால் மேடைகளில் பாட ஒரு சில வாய்ப்புகள் கிடைத்தபோதும், பெரிய அளவில் வருமானம் ஏதுமில்லை. அந்தச் சிறிய வயதிற்குள் தமது அனுபவங்களைக் கவிதையாக வடித்தார் ஆண்டர்ஸென். அவற்றைப் படித்த நண்பர் ஒருவர் அதைப் புத்தகமாகப் போட ஏற்பாடு செய்தார். அது மட்டுமல்லாமல், அரசரிடம் முறையிட்டு, ஆண்டர்ஸென்னுக்குப் படிப்பைத் தொடரவும், மற்ற நாடுகளைச் சுற்றிப் பார்த்து வரவும், நிதி பெற்றுத் தந்தார். அதுதான் ஆண்டர்ஸென்னின் வாழ்க்கையில் ஒரு திருப்பு முனை. ஐரோப்பாவின் பல நாடுகளைச் சுற்றி வந்த ஆண்டர்ஸென் 'எத்தனை பெரிய உலகம்; என்னென்ன அதிசயங்கள்; எப்படிப்பட்ட மனிதர்கள்!' என்று வியந்து போனார். கவிதைகளும், நாடகங்களும், நாவல்களும் எழுதிக் குவித்தார். அவர் எழுதிய சுற்றுலாப் புத்தகங்கள் மக்களை மிகவும் கவர்ந்தன. வறுமை அவரிடம் இருந்து விடைபெற்று ஓடியே போனது.

நாடகம், கவிதை, நாவல் என்று பல தரப்பட்ட எழுத்து வடிவங்களைக் கையாண்டு, தனது எண்ணங்களை ஆண்டர்ஸென் கொட்டியிருந்தாலும், உலகம் அவரைப் பற்றிச் சொல்லும்போது, மறக்காமல் குறிப்பிடுவது Fairy Tales கதைகளைத் தான். 'குட்டி கடற்கன்னி பனிராணி, பேரரசரின் புதிய ஆடைகள்' என்று மறக்க முடியாத பல கதைகளைக் கொண்டது Fairy Tales தொகுப்பு. இந்தக் கதைகளை எழுதும்



• அசிங்கமான வாத்துக்குஞ்சு கதையில்...


போது ஆண்டர்ஸென்னுக்கு வயது முப்பது தான்.

ஆண்டர்ஸென் அற்புதமான, அழகான, அதிசயத்தக்க, அட்டகாசமான கதைகளை எழுதினாரே தவிர, தனது தோற்றத்தைப் பொறுத்தமட்டில் எந்தவித அக்கறையும் அவர் எடுத்துக் கொள்ளவில்லை. காலத்தோடு ஒட்டாத உடைகள், கலைந்த தலை, பட்டன் போடாத கோட் என்றுதான் சுற்றிக் கொண்டிருந்தார். ஆனால் குழந்தைகள் அவரது தோற்றத்தைப் பற்றித் துளியும் கவலைப்படாமல், அவரது கதைகளின் மேல் நாட்டம் காட்டினார்கள். இன்றைய குழந்தை இலக்கிய எழுத்தாளர்களின் தலைமகன் அவர் என்பது நிஜம். — ப்ரியன்



விஞ்ஞானி கடத்தல்!
கதை, படம்:
முத்து
5
ஐயோ, தாத்தா எங்கே போனீங்க? அது என்ன துண்டு பேப்பர்?
அந்தக் காகிதத்தில் -
ஜீப்... மாத்திரை... தண்ணீர்...
மாமா, தாத்தாவைக் காணோம். இந்த பேப்பர்தான்...
மறுபடியும் காணாமா?
காட்டுவாசிகளின் தலைவர் அங்கு வந்து சேர்ந்தார்.
அந்த ஆளை விட்டுட்டீங்களா?
ஐயோ, எங்க பாஸ் எங்களைக் கொன்னுடுவாரே!
வேற யாரோ கடத்திட்டுப் போயிருக்காங்க.
கவலைப்படாதீங்க. எங்கள் மாந்த்ரீகர் உங்கள் தாத்தா இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து விடுவார்.


ஐயா, நாங்கள் கிளம்புறோம். அவங்க ரொம்ப தூரம் போயிருக்க முடியாது.
அப்படின்னா, தெற்குப்பக்கம் போங்க. வனதேவதை துணை இருப்பாள்.
நன்றி கூறிக் கிளம்பினர்.
அதே நேரம் -
பில்லி! நாம தப்பிப் போனால்தான் அந்தக் கிழவரைப் பிடிக்க முடியும்.
ஆமாம்.
தாத்தா எழுதி வைத்த குறிப்பு ஒண்ணும் புரியலையே!
ஒருவேளை அன்னிக்கே ஜீப்பில் பார்த்த இந்த மாத்திரையைத்தான் எழுதியிருப்பாரோ?
இருக்கலாம்.


நான் இந்த மாத்திரையைச் சாப்பிட்டுப் பார்க்கிறேன்.
வேண்டாம் ரகு.
!
ப்ளீஸ் மாமா...
இதில் ஏதோ விஷயம் இருக்கு.
பில்லியும் விக்கியும் காட்டுவாசிகளிடமிருந்து தப்பி வந்தனர்.
மறுபடியும் தலைவர்கிட்டே பேசிப் பாரேன்.
பாஸ், நீங்க சொன்னபடி அந்தக் கிராமத்துல தங்கினோம். ஆனா வேறு யாரோ விஞ்ஞானியைக் கடத்திட்டாங்க.
நம்ம ஆள் ஒருத்தன்தான் அவரை இங்கே அழைச்சிட்டு வர்றான் நீங்களும் வந்து சேருங்க.


சும்மா சொல்லக்கூடாது. நம்ம தலைவர் பெரிய ஆள்தான்!
இதற்கிடையே ரகு மாத்திரையைச் சாப்பிட்டான்.
ரகு, எனக்குப் பயமா இருக்குடா.
ஒண்ணும் ஆகாது.
ரகு சிறிது சிறிதாக மறைய ஆரம்பித்தான்.
ரகு... ரகு... நீ எங்கே?
ரகு முற்றிலும் மறைந்த பின் ஆகாஷும் ஜானுவும் திகைத்துப் போய் ஜீப்பை விட்டு இறங்கினர்.
மாமா ரகு எங்கே போனான்?
(தொடரும்)

பூப் பூவாய்த் தூவும்



முதல் பரிசு:
செ. ஹேமா, எட்டாம் வகுப்பு,
ஸ்ரீ வித்யா மந்திர் பள்ளி,
இரும்பாலை, சேலம்.

வண்ணத் தூரிகை முடிவு

ஆகஸ்ட் இதழில் 'மழை' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள் இங்கே...



இரண்டாம் பரிசு:
எஸ். கௌசல்யா, நான்காம் வகுப்பு,
ஸ்ரீ வித்யா மந்திர் மெட்ரிக் பள்ளி,
சேலம்.





மூன்றாம் பரிசு:
வி. காயத்ரி,
நான்காம் வகுப்பு,
கேந்திரிய வித்யாலயா, சென்னை

மழை!



ஆறுதல் பரிசு:
ஆர். ஸ்ரீநிவாஸன்,
நான்காம் வகுப்பு,
டாக்டர் ஜி. சிற்றம்பலம்
மெட்ரிகுலேஷன் பள்ளி,
ஸ்ரீரங்கம்.





ஆறுதல் பரிசு:
சி. குபேரன்,
எட்டாம் வகுப்பு,
ஸ்ரீராமகிருஷ்ணா
வித்யாலயா குருகுலம்,
உளுந்தூர்பேட்டை.

உங்களிடமிருந்து...



நேரில் பார்த்த உணர்வு!

போஸ்டர் அற்புதம்!

ஆவின் பால் பண்ணைக்கு நேரில் சென்று பார்த்த உணர்வு ஏற்பட்டது. திருவண்ணாமலையின் சிறப்புகள், உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் என்ற முதல் பரிசுக் கதை, அன்புள்ள ஜக்கு பகுதிகள் என்னை மிகவும் கவர்ந்தன. விம்பிள்டன் சாம்பியன்கள் 2003 போஸ்டர் அற்புதமாக இருந்தது!

- பெ. கோபி சிவராமன், எட்டாம் வகுப்பு, அரசு மேல்நிலைப்பள்ளி, கீழ்க்கொடுங்காலூர்.

நல்ல கருத்து!

அழ. வள்ளியப்பா நினைவு சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற 'உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்' மிகச் சிறந்த கதை. குரங்குக் குட்டிக்குத் தீங்கு செய்த குமார், பிறகு மனம் திருந்தி வருந்துவது நல்ல கருத்தினை வலியுறுத்துவதாக இருந்தது.

- பி. சுசீலா, ஏரிப்பாளையம்.

வாரம் ஒருமுறை...

உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் கதை சூப்பராக இருந்தது. கோகுலம் வாரம் ஒருமுறை வந்தால் அதைவிட சந்தோஷம் எனக்கு வேறு எதுவும் இல்லை!

- ச. இன்பசாகரன், வங்காரம்பேட்டை.

ஷாவின் சமயோசிதம்!

'உருளைக்கிழங்கை யார் சாப்பிடுவார்கள்?' என்ற துணுக்கைப் படித்து ரசித்தோம். ஷாவின் சமயோசிதம் அருமை! பொற்காசுகள் அறுவடை, பாயசமா, சந்தனமா? கதைகள் நன்றாக இருந்தன.

- ஆர்.ஜி. ஹரிஹரா, திசையன்விளை.

மாறிய எண்ணம்

வலிப்பு நோயைப் பற்றி இதுவரை இருந்த தவறான எண்ணம் 'ஹலோ சுகமா?' பகுதியில் டாக்டர் அளித்த விளக்கத்தைப் படித்தவுடன் போய்விட்டது.

- அ. குமரன், வில்லரசம்பட்டி.

பெருமிதம்!

திருவண்ணாமலை சிறப்பிதழ் கண்டேன். பல நல்ல தகவல்களைத் திரட்டித் தந்திருந்தீர்கள். இருந்தாலும் திருவண்ணாமலைக்கே தீப ஒளியாய்த் திகழ்ந்த ரமண மகரிஷி, அண்மையில் மறைந்த யோகி ராம்சூரத்குமார் பற்றியும் எழுதியிருக்கலாம். அண்டார்டிகாவில் பெயர் பெற்றுள்ள ஸ்ரீதர் அனந்தகிருஷ்ணன் குறித்து ஒவ்வொரு தமிழரும் பெருமிதம் கொள்ளலாம்!

- முகதி. சுபா, திருவண்ணாதபுரம், நெல்லை மாவட்டம்.

சுழல் கோப்பை

ஒவ்வொரு ஆண்டும் கோகுலம் இதழ்களில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ, அந்தப் பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கி வருகிறோம். நல்லூரர், இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலியைச் சேர்ந்த பள்ளிகள் முன்னிலை வகிக்கின்றன. இன்னும் மூன்று மாதங்களே உள்ளன. போட்டியிடும் பள்ளிகள் உடனே படைப்புகளை அனுப்புங்கள். சுழல் கோப்பையை வெல்லுங்கள்!



நேரம் வரும் காத்திரு!

⑧ பிடிபட்டார் சதாசிவம்!

பொற்கேணி ஹாஸ்டல்.

சதாசிவம் நிமிர்ந்தார். கரீமின் அப்பாவும், அம்மாவும் வந்து நின்றனர்.

''ஹலோ... குட்மார்னிங் வாங்க! என்ன பையனுக்கு பார்த்டேவாமே!''

''ஆமாம். உங்களுக்காகத்தான் இந்த செல்ஃபோன்! எங்களோட பேசணும்னு தோணினா நீ சதாசிவம் சாரைப் பாரு! அவர் ஏற்பாடு செய்வாருன்னு கரீமிடம் சொல்லியிருக்கேன். உங்ககிட்ட இது இருந்தா வசதியாயிருக்கும். பசங்ககிட்ட செல்ஃபோன் கூடாதுன்னு நீங்கதான் சொன்னீங்களே! நீங்க இதை ஏத்துகிட்டுதான் ஆகணும். இது என்னோட அன்பு வேண்டுகோள். இப்ப, புதுசாதான் சிம் கார்ட் போட்டிருக்கேன். என் வீட்டு அட்ரஸ்லதான் இருக்கு! அடுத்த மாசம் வரும்போது இதை மாத்திக் கொடுக்கறேன். ஆனா இதை இப்ப நீங்க ஏத்துக்கறீங்க!''

''நோ நோ! அது நல்லாயில்லைங்க!''

''இல்லை சார்! என் பையனோட தேவை கருதி அவனுக்கும் பயன்படும்னு நான் செய்யற சின்ன மரியாதை, அவ்வளவுதான். செல்ஃபோன் கொடுக்கும்போது கார்ட் இல்லாம கொடுத்தா நல்லாயிருக்காதேன்னுதான் போட்டுக் கொண்டு வந்தேன்! வாங்கிக்குங்க! யூஸ் பண்ணிக்குங்க!''

''கிளம்பறோம். பையனைக் கொஞ்சம் கவனமாப் பார்த்துக்குங்க சார்!'' என்று கிளம்பினார் கரீமின் தந்தை.

''சரி! வேற என்ன பண்றது? பார்த்துக்கறேன்'' என்றார் சதாசிவம்.

எஸ்.பி. ஆபிஸில்...

''சொல்லுங்க வைஸ் பிரின்ஸி! அந்த செல்ஃபோன் இப்ப சதாசிவம்கிட்ட இருக்குல்ல! இனி நம்ம வேலை, அவரு அந்த ஃபோன்ல

தன் பர்சனல் கால் எல்லாம் பேசற மாதிரி செய்யணும். அதோட எங்க போனாலும் அதை எடுத்துட்டுப் போற மாதிரி செய்யணும். ஸ்கூலுக்கு எடுத்துட்டுப் போறாரா?''

''ம்.. எடுத்துட்டு வர்றார் சார்! கில்லாடி தான். அவரோட ஃப்ரெண்ட் ஃபாரின்ல இருந்து வந்தவன், கிஃப்ட்டா கொடுத்ததா சொன்னார் என்கிட்டயே!''

''அப்ப உங்களுக்கு அந்த நெம்பரையும் கொடுத்திருப்பாரே! தெரியுமில்லை! கால் போட்டு ஏதாவது பேசுங்க! சும்மாதான்.''

அவர்கள் பேசும் போதே எஸ்.பி.யின் செல்ஃபோன் ஒலிக்க, ''ஆமாம்...நான் நெம்பர் தரேன். அதைக் கொஞ்சம் ரகசியமா டேப் பண்ணணும். இதுல அஃபிஷியலா ஒண்ணும் இல்லை. பெர்சனல்தான். ஒரு ஃப்ரெண்டுக்காக!'' என்றார் எஸ்.பி!

''சரி சார்! நான் கிளம்பறேன்...'' என்றபடி வைஸ் பிரின்ஸி கிளம்ப ''நான் எல்லா ஏற்பாடும் பண்ணிட்டேன். இப்ப உங்க வேலைதான். அவரு செல்ஃபோனை யூஸ் பண்ணி எல்லா பர்சனல் காலையும் பேச வைங்க! ஆளைப் பிடிச்சிடலாம்''

''ஓகே சார்'' என்று விடை பெற்றார் வைஸ் பிரின்ஸி.

இரவு 9.00 மணி.

சதாசிவம் அவசரமாய் ஹாஸ்டலுக்குள் வந்தார். அவருக்காகக் காத்திருந்த ஹாஸ்டல் மேனேஜர், ''சார் உங்களுக்கு இன்னைக்கும் ரெண்டு, மூணு கால் வந்தது. யாருன்னு சொல்லலை. நீங்க தப்பா நெனைக்காட்டி ஒரு...'' என்று இழுத்தார்.

''என்னய்யா? சொல்லு என்ன சொல்ல வந்தே சொல்லிடு.''

''இல்லை சார் கோபப்படாதீங்க! புதுசா செல்ஃபோன் வாங்கியிருக்கீங்களே! அந்த நெம்பரை அவங்களுக்குக் கொடுத்தா நீங்க எங்கிருந்தாலும் அங்கேயே உங்களைப் பிடிச்சுடுவாங்க! பேசிக்கலாம். இல்லாட்டி என்கிட்ட அந்த நெம்பர் சொன்னீங்கன்னா, இது மாதிரி பர்சனல் காலாயிருந்தா மட்டும் அவங்களுக்கு உங்க செல்ஃபோன் நெம்பரைக் கொடுத்து பேசச் சொல்லிடறேன். இது, நீங்க விருப்பப்பட்டா மட்டும்... இல்லாட்டி... வேணாம்!'' என்றார்.

''சரி விடுங்க! நானே ஃபோன் பண்ணி



பேசிக்கிறேன். நெம்பரை நானே கொடுத்துடறேன். நீங்க போகலாம்'' என்றார்.

அங்கிருந்து கிளம்பிச் சென்ற மேனேஜர் உடனே வைஸ் பிரின்ஸ்பலுக்கு ஃபோன் போட்டு ''சார், நீங்க சொன்ன படியே செய்துட்டேன்'' என நடந்தது முழுவதையும் விளக்கமாகச் சொன்னார்.

அந்த ஞாயிற்றுக்கிழமை அருணும், ராகவும், சதாசிவம் வாத்தியாரைக் கையும் களவுமாகப் பிடிக்க ஏதோ ஏற்பாடு நடப்பது பற்றி பேசிக் கொண்டனர். என்ன விஷயம் என முழுசாய்த் தெரியவில்லை. தெரிந்து கொள்ள ஆர்வம். எனவே கரீமைத் தொடர்பு கொண்டனர்.

''ஹலோ... நான் ராகவ் பேசறேன்! கரீம் தானே பேசறது?''

''கரீமா? நீங்க யாரு பேசறது? என்ன பேரு சொன்னீங்க?''

''யாரு கரீமா அது? என்னடா குரல் வேற மாதிரியிருக்கு? நான்தான் ராகவ் பேசறேன். டேய் இப்ப நாங்க மட்டும்




இங்க! நீயும், வில்சனும் மட்டும் அங்கன்னு ரொம்ப போர் அடிக்குதுடா...?''

"டேய்... யாரு ராகவ்வா? என்னடா யாரு கிட்ட பேசறே தெரியுதா? நான் சதாசிவம். உங்க மாமா எங்ககிட்ட வம்பு வச்சிக்கிட்டான். எனக்கும் இடைஞ்சல் பண்ணான். மேல போயிட்டதா நினைச்சான். பார்த்தியா, சரியா பார்த்து உனக்கு வெச்சேன் வேட்டு! அதைவிடு, உங்கிட்ட என்ன பேச்சு! கரீமோடெல்லாம் நீ இந்த ஃபோன்ல பேச முடியாது!'' ஃபோன் கட்டானது.

மறுபடியும் அருண் அதே எண்ணுக்கு முயற்சி செய்து கரீமைக் கேட்க, "ஏண்டா முண்டம்! இப்பதானே ராகவ் பேசினான். அவன்கிட்ட சொன்னேன் இல்லை! இப்ப நீயா? இந்த மாதிரி வெட்டியா அவனுக்கு வால் பிடிச்சதாலதான், வீணா நீயும் பலியாயிட்ட! இன்னும் அவன் பின்னாடிதான் சுத்தறியா? ஒழுங்கா உன் பிழைப்பைப் பாரு! சும்மா ரகளை பண்ணிங்க, இந்தக் கரீமையையும், வில்சனையும் ஏதாவது காரணம் சொல்லி, காலி பண்ண வெச்சிருவேன்'' என்று மறுபடியும் ஃபோனை கட் பண்ணினார். ராகவும், அருணும் இந்தத் தகவலை உடனே அவர்களது பெற்றோரிடம் சொன்னார்கள்.

அன்று மாலை...

செங்கற்பட்டு பஸ் நிலையத்துக்கு



பெரும்பாலான பறவைகள் பார்த்தும், ஒலியைக் கேட்டும்தான் வேட்டையாடுகின்றன. ஆனால் நியூசிலாந்திலுள்ள கிவி என்ற பறவை வாசனையுணர்வைப் பயன்படுத்துகிறது. இதனால் பறக்க முடியாது. இரவில்தான் இரை தேடும். மூக்கினால் முகர்ந்து மட்கிய மரம் அல்லது மண்ணுக்குள் தன் அலகைக் குத்தி அங்கிருக்கும் புழுப் பூச்சிகளை உண்கிறது.

- என். ஜரீனா பானு

அருகேயிருந்த லாட்ஜைத் தேடி பிடித்து, அறை எண் 56ன் கதவைத் தட்டினார் சதாசிவம். கதவைத் திறந்த பெண்மணி, "யாரைப் பார்க்கணும்? நீங்க யாரு?" என்றார்.

"நான் சதாசிவம்! பொற்கேணி பள்ளிக்கூட டெபுடி வார்டன், அந்த ஸ்கூல் டீச்சர்! மாணிக்லால் சேட் என்னை இங்க வரச் சொன்னார்" என்றார்.

"ஒரு நிமிஷம்!" என்றபடி பக்கத்தில் இருந்த தடுப்பு சுவருக்குப் பின்னால் இருந்த இன்னொரு அறைக்குச் சென்றார்.

உள்ளேயிருந்து வந்த குரல், "அவரு டாக்குமெண்ட்டெல்லாம் கொண்டாந்து இருக்காரு! கேட்டு, வாங்கி உள்ளை வை!" என்றது.

அந்தப் பெண்மணி, மீண்டும் வெளியே வந்து, "டாக்குமெண்ட்" என்றதும், ஒரு சூட்கேஸை நீட்டி, அதைத் திறந்தும் காட்டினார் சதாசிவம். பெண்மணி அதை வாங்கி உள்ளே வைத்ததும் "சார் கொடுத்துட்டாரு!" என்று குரல் கொடுக்க, பாத்ரூம் கதவைத் திறந்து கொண்டு பொற்கேணி கரஸ்பாண்டண்ட் வெளியே வந்தார். அதே நேரத்தில் அறைக்குள் நுழைந்தனர் எஸ்.பி, பிரின்ஸ்பல் மற்றும் வைஸ் பிரின்ஸ்பல். அடுத்த சில நிமிடங்களில் ராகவ், அருண் இருவருடனும் அவர்களது தந்தையரும் உள்ளே வர, சதாசிவத்துக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

"என்ன சதாசிவம்? நீங்க பண்ணியது சரியா? வீணா உங்களோட தனிப்பட்ட ஈகோ பிரச்னைக்கு இந்தப் பசங்களைப் பழி வாங்கிட்டீங்க! அவங்களை ஸ்கூலை விட்டு வெளியே அனுப்பிட்டீங்க! சரி, அப்புறமாவது ஸ்கூலுக்கு நேர்மையாயிருந்தீங்களான்னா அதுவும் இல்லை. நம்ம ஸ்கூல் பத்தின ரெக்கார்ட் எல்லாத்தையும் வேற ஸ்கூலுக்கு விற்கத் துணிஞ்சிட்டீங்க!"

சதாசிவம் பேய் அறைந்தது போல நிற்க,

"எப்படி கண்டுபிடிச்சோம்னுதானே யோசிக்கறீங்க? எல்லாம் இந்த வாலுங்க எழுதின திரைக்கதைதான். நாங்க கொஞ்சம் மாத்தி, திருத்தி எழுதி அரங்கேற்றிட்டோம்.

வில்சனும், கரீமும் அவர்களது தந்தையுடன் உள்ளே நுழைய, இனியும் தப்ப முடியாது என்பதை உணர்ந்தார் சதாசிவம்.

"சாரி சார்" என்று கரஸ்பாண்டண்ட் காலில் விழுந்தார்.

"எழுந்துருங்க! நீங்க ஸாரி சொல்ல வேண்டியது எனக்கில்லை; இந்தப் பசங்களுக்குத்தான். எஸ்.பி.சார்! இவரை என்ன பண்ணணுமோ, சட்டப்படி நடவடிக்கை எடுங்க! எங்க அந்த சேட்?" என்றார் கரஸ்பாண்டண்ட்.

"அவங்களை ஏற்கெனவே ஸ்டேஷனுக்குக் கொண்டு போயாச்சு! அப்புறம் இந்தாங்க... சார்! நீங்களே இந்தப் பசங்களுக்கு ஒரு சின்ன கிஃப்ட் கொடுங்க!" என்று நான்கு பார்சல்களை நீட்டினார்.

நால்வரும் பெற்றுக் கொண்டனர்.

மீண்டும் அருண், ராகவ் இருவரையும் அந்தப் பள்ளியில் சேர்த்துக் கொள்வதாக பிரின்ஸி கூறினார்.

சதாசிவத்தை அழைத்துக்கொண்டு எஸ்.பி வெளியேறினார்.

நண்பர்கள் நால்வரும் மகிழ்ச்சியுடன் கிளம்பினர்.

(முற்றும்)

செய்தித் துளிகள்

உயிர் காக்கும் டி ஷர்ட்!

இதயத்துடிப்பு, ரத்த அழுத்தம், ஆக்ஸிஜன் அளவு, வெப்ப அளவு என உடலின் இயக்கத்தை அளவிடும் டி ஷர்ட்டைக் கண்டுபிடித்திருக்கிறார் ஜே. சுந்தரேசன். இவர் அமெரிக்க வாழ் தமிழர். வழக்கத்துக்கு மாறாக இதில் ஏதாவது ஒன்று குறைந்தால் அது குறித்து எச்சரிக்கை சமிக்ஞை செய்து, பாதிக்கப்பட்டவரின் உயிர் காக்க உதவுகிறது இந்த டி ஷர்ட். இதயச் செயல்பாட்டில் சிறு மாறுதல் இருந்தாலும் உடனடியாகக் காட்டிக் கொடுத்து விடும். இதை அணிவது சுலபம்.

இந்த டி ஷர்ட்டில் சென்சார் புள்ளிகள் அமைக்கப்பட்டிருக்கும். இப் புள்ளிகள் சிறிய கண்ட்ரோல் பாக்ஸுடன் இணைக்கப்பட்டிருக்கும். இந்த கண்ட்ரோல் பாக்ஸ், பேண்ட் பாக்கெட்டில் வைத்துக் கொள்ளும் அளவில் சிறிதாக இருக்கும். இதன் விலை 12,500 ரூபாய். வர்த்தக ரீதியில் பெருமளவில் தயாரிக்கும்போது விலை குறையும் என்கிறார் சுந்தரேசன்.

வாள் ஏலம்!

1799ஆம் ஆண்டு மைசூர் அருகே ஸ்ரீரங்கப்பட்டணத்தில் திப்பு சுல்தானுடன் நடந்த போரில் பிரிட்டிஷ் படை வென்றது. போரில் திப்பு மரணமடைந்தார். இந்த வெற்றியின் அடையாளமாகத் திப்பு சுல்தானின் மாளிகையில் இருந்து விலை உயர்ந்த பொருட்களை பிரிட்டிஷார் எடுத்துக் கொண்டு சென்றனர். திப்பு சுல்தானிடம் இருந்த வாளை பிரிட்டிஷார் தங்கள் ராணுவ ஜெனரல் பெயர்டு என்பவருக்குப் பரிசாகக் கொடுத்தனர். வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த வாள் 91 செ.மீ நீளமுடையது. இந்த வாள் லண்டனில் உள்ள தேசிய போர் அருங்காட்சியகத்தில் சமீப காலம் வரை காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. தற்போது ஏலம் விடப்படவுள்ளது.

துளசி பானம்

துளசிச் சாற்றை அடிப்படையாகக் கொண்டு பானம் தயாரிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறது கோல்கத்தா உணவு தொழில் நுட்ப ஆய்வகம். துளசி நல்ல மருத்துவ குணம் கொண்ட மூலிகை. இதன் சாறு நன்மை தருபவை. உறக்கமின்மையால் அவதிப்படுவோருக்குத் துளசிபானம் வரப்பிரசாதமாக அமையும். துளசிச் சாற்றில் உர்சோலிக் அமிலம், துத்தநாகம், லியுடியோலின் போன்ற நுண்ணூட்டப் பொருள்கள் உள்ளன. எந்தவிதப் பக்க விளைவும் தராதது துளசிச் சாறு. மருத்துவ குணம், ஊட்டச் சத்து போன்றவற்றில் மாம்பழம், புதினா, தனியா, கேரட் உள்ளிட்ட மற்ற மூலிகைகளை விட துளசிச் சாறு தனித்து நிற்கிறது. துளசி மணம் கலந்த பால், யோகர்ட், லஸ்ஸி போன்ற பானங்களை விற்பனை செய்யவும் இந் நிறுவனம் முயற்சி செய்து வருகிறது.

ஓவியப் போட்டி

தாய்ப்பறவை குஞ்சுகளுக்கு உணவூட்டும் காட்சியைக் கண்டு ரசித்திருக்கிறீர்களா? இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு: தாய்ப் பறவை குஞ்சுகளுக்கு இரை கொடுத்தல்.

எந்தப் பறவையாக வேண்டுமானாலும் இருக்கலாம்; மரத்தில், கூட்டில், தரையில் எங்கு வேண்டுமானாலும் அமர்ந்து உணவூட்டலாம். உங்கள் கற்பனையைத் தட்டிவிட்டு ஓவியத்தை வண்ணத்தில் வரைந்து அனுப்புங்கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. முகவரியை அவசியம் குறிப்பிடுங்கள்.

கடைசித் தேதி **4.09.2003**





சிலந்தி வலையில் சிலந்தி மாட்டிக் கொள்வதில்லையே, ஏன்?



● அ. குமரன், வில்லரசம்பட்டி.

? பணம் இல்லாமல் வாழவே முடியாது என்பது உண்மையா ஜக்கு?

சாப்பிட, உடுத்த, தங்க என அடிப்படைத் தேவைகளுக்கே பணம் அவசியம். பணத்தை நாம் காப்பாற்றுவதை விட, பணம் நம்மைக் காப்பாற்றும் அளவிற்கு அவசியமானதுதான் குமரன்! எனவே பணம் இல்லாமல் வாழ முடியாது என்பது உண்மைதான்.

● பி. நளினாதேவி, தேவிபட்டணம்.

? சிலந்தி வலையில் சின்னஞ் சிறு பூச்சிகள் மாட்டிக் கொள்கின்றன. ஆனால் சிலந்தி மாட்டிக் கொள்வதில்லையே, ஏன் ஜக்கு?

சிலந்தி வலை பின்னும்போது சில இழைகளை மட்டும் விட்டு விட்டு, பல இடங்களில் பூச்சிகளைப் பிடிப்பதற்கு வசதியாகக் கண்ணி வைக்கும். இதனால் வலை பின்னிய சிலந்திக்குக் கண்ணி வைத்த இடம் நன்றாகத் தெரியும். எனவே சிலந்தி தான் பின்னிய வலையில் மாட்டிக் கொள்வதில்லை. இந்தச் சிலந்தி வேறொரு சிலந்தியின் வலையில் மாட்டிக் கொள்ளும் வாய்ப்பு உண்டு.

● எஸ். சுபைதா பேகம், கீழக்கரை.

? முதுகெலும்பு தரையில் படுமாறு உறங்கும் பிராணிகள் எவை?

பிராணிகள் என்று சொல்ல முடியாது சுபைதா. முதுகெலும்பு தரையில் படுமாறு உறங்கும் ஒரே பிராணி நீங்கள்தான்! அதாவது மனிதர்கள் மட்டுமே.

● உ. காசிநாதன், சோழபுரம்.

? கண்ணாடியில் பார்க்கும்போது எழுத்துகள் தலைகீழாய்த் தெரிகிறதே ஏன் ஜக்கு?

உங்கள் கேள்வியில் ஒரு தவறு இருக்கிறது காசிநாதன். எழுத்துகள் இட, வல மாற்றமாகத் தெரியுமே தவிர, தலைகீழாய்த் தெரியாது. அப்படி தலைகீழாய்த் தெரிந்தால் நீங்களும் அப்படித்தானே தெரிவீர்கள்? ஒரு கண்ணாடியின் முன் நீங்கள் நிற்கும்போது உண்டாகும் பிம்பம், உங்கள் உருவளவே இருப்பதுடன் நீங்கள் கண்ணாடியின் முன் எவ்வளவு தொலைவில் நிற்கிறீர்களோ, அதே தொலைவில்தான் ஏற்படவும் செய்கிறது. பிம்பத்தின் தொலைவு மாறாத இந்தப் பண்பே, உருவத்திற்கு இட, வல மாற்றம் ஆவதற்கும் காரணமாகிறது. அதாவது உங்கள் உருவம் அப்படியே பிரதிபலிப்பதால் இப்படி தோன்றுகிறது.


புறப்பட்டார்
பிள்ளையார்!

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 * Registered as a Newspaper in Srilanka